உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி—உஎ.] விபவஹு தைமீ [பகுதி—௩.

Vol. XXVII. January-February 1929. No. 3.

## பிரகிருதிசாஸ்த்ரம்.

## (PHYSICAL SCIENCE)

(மதுரை அமெரிக்கன்கல்லூரிப் பௌதிகசாஸ்த்ர ஆசிரியர்
ஸ்ரீமான் N. R. கிருஷ்ணமூர்த்திஐயரவர்கள் M.A., எழுதியது.)

### பௌதிகம் (Physics).

[சஅ-ம் பக்கத் தொடர்ச்சி.]

### V. காந்தம் (Magnetism.)

காந்தத்தின்விஷயத்தைப் பொதுவியல் (General), காந்தக் கணக்கியல் (Magnetic Calculations), காந்தப் பரிசோதனையியல் ((Magnetic Measurements), பூமிக் காந்தவியல் (Terrestrial Magnetism) என நான்குபகுதிகளாகப் பிரிப்பது வழக்கம். பொதுவியலில், காந்தத்தின் பொதுத்தன்மை கூறப்படும். கணக்கியலிற் காந்த இராசிகளின் அளவைகளும், அவற்றுக்குரிய திட்டங்களும், அத்திட்டங்களினூறுகக் கிடைக்கும் கணக்குகளும் (The units of Magnetic quantities, the laws governing them, and calculations, based on those laws விவரிக்கப்பெறும். இக்கணக்கியலிற் கிடைத்துள்ள முடிவுகளெல்லாம் பரிசோதனையியலில் ஏற்ற கருவியமைப்புக்களைக்கொண்டு நிரூபிக்கப்பெறும். பூமிக்காந்தவியலிற் பூகோளப்பரப்பினில் தோன்றும் இயற்கைக்காந்தம் ஆராயப்படும். இந்நான்கு இயல்களில் ஒன்றைமட்டுமே இங்கு விவரித்துக்கூறுவோம்.

## பொதுவியல் (General).

காந்தக்கல் அல்லது இயற்கைக்காந்தி (Lodestone or Natural Magnet):—காந்தக்கல்லானது மாக்னீஸியா (Magnesia) என்னும் பிரதேசத்தில் மிகுதியாகக் காணப்படுகின்றது. சேலம் ஜில்லாவிலும் கிடைப்பதாகக் கூறுகிறார்கள். இது ஒருவிதமான இருப்புத்தாது (Iron ore). காந்தக்கல் சற்றுச் சிவந்த கருநிறமுள்ள மண்கட்டிபோலப் பூமியிற் கிடக்கும். இதனுடைய முக்கிய குணாதிசயங்கள் இரண்டு. ஒருகாந்தக்கல்லை எடுத்து ஒரு பட்டுநூலை அதன்மையத்திற்கட்டி, கல்லை அந்நூலினால் தாங்கி நிறுத்தினால், கல்லானது சற்றுநேரம் அசைந்தாடிச் சென்று, முடிவில் தெற்கு வடக்காக நிலைபெற்று நின்றுவிடுகிறது. இத்தகைய தெற்கு வடக்கு நிலையே காந்தக்கல்லுக் கியற்




படம் 39.

கையாக அமைந்துள்ளது. இவ்விதம் தனது நிலைப்பிடத்திற்கு (Position of Rest) வந்துள்ள கல்லைச் சற்று அசைத்துவிடுத்தால், அது முன்போலவே ஆடிச்சென்று, முடிவில் தெற்குவடக்காகவே நின்று அமைதிபெறுகின்றது. எனவே காந்தக்கல்லானது புராதனமக்களால் திசைக்கருவியாக உபயோகிக்கப்பெற்றது என்பதில் ஆச்சரியமின்று. திசைகாட்டும் குணத்தைத் தவிர்த்து மற்றொருகுணம் யாதெனின், காந்தக்கல் இருப்புத்துண்டுகளையும் இருப்புப்பொடியையும் தன்னிடத்தே இழுத்துக்கொள்ள வல்லது என்பதே. முற்கூறிய காந்தக்கல்லை இருப்புப்பொடியிற் போகட்டுத் தூக்கினால் இருப்புப்பொடியானது கல்லினைப் பற்றிநிற்கும்வகை படம் 39-ல் வரைந்துள்ளவாறு. இருப்புப்பொடி கல்லின் இருநுனிகளிலும் செறிந்து நிற்பது கவனிக்கத்தக்கது. காந்தக்கல் பூமியில் இயற்கையாக விளையும் காரணம்பற்றி, இதற்கு இயற்கைக்காந்தி (Natural Magnet) எனப் பெயர்.

ஆக்கப்பட்ட காந்திகள் (Artificial Magnets):—இவை பற்பல உருவங்களுடன் இரும்பினாலாக்கப்பெற்றுக் காந்தம் ஊட்டப்பட்டிருக்கின்றன. இவற்றுள் முக்கியமானவை காந்தஊசி (Magnetic Needle), காந்தக்கழி (Bar Magnet), காந்தலாடம் (Horse-shoe Magnet) ஆகிய இம்மூன்றுமே. இவற்றை ஆக்கும் முறைகளைச் சற்றுக் கவனிப்போம்.

முதன்முதலாக, தையல்வேலையில் உபயோகிக்கும் சாதாரண இருப்பு ஊசியிற் காந்தம் ஊட்டுவதற்கானதோர் எளியமுறையைக் கூறுவோம். ஒரு ஊசியை எடுத்து, அதனை ஒரு மெல்லிய முறுக்கேற்றப்படாத (Unspun) பட்டுநூலினால் மையமாகத் தாங்கிநிறுத்திக்கொள்க. ஊசி படுமட்டமாக (Horizontal) நிற்கவேண்டும். இப்படி நிறுத்தினால், ஊசியை எத்திசையாகவும் நிற்கவைக்கலாம். நூலினை நீக்கிவிட்டு, ஊசியை மேசையின்மீது படுமட்டமாக வைத்துக்கொள்க. ஒரு காந்தக்கல்லை (Lode stone) வலதுகையில் எடுத்துக்கொள்க. இடதுகைக் கட்டைவிரலின் நகத்தினால் ஊசிக்கண்ணைப்பற்றி மேசையின்மீது அழுத்திக்கொண்டு, மற்றக்கையிலுள்ள காந்தக்கல்லினது ஒரு குறிப்பிட்ட நுனியை ஊசியின்மீது வைத்து, ஊசிக்கண்ணிலிருந்து, கூரிய நுனிவரை நேர்மையாக உராயவேண்டும். இம்மாதிரியாகவே, கல்லின் ஒரே நுனியினால், ஊசியைக் கண்ணிலிருந்து நுனிவரை ஒரே திசையாகப் பன்முறை உராய்ந்துகொள்க. இப்பொழுது ஊசி, காந்தஊசியாகிவிட்டது. இதை எளிதிற் பரிசோதிக்கலாம். முன்போலவே பட்டுநூலிற்கட்டித் தொங்கவைக்க, இது காந்தக்கல்லைப்போலவே அசைந்து முடிவில் தெற்குவடக்காக நிற்கின்றது. இதனுடைய முனையை, காந்தம் ஊட்டப்பெறாத மற்றொரு ஊசியின்முனைக்கு அருகே கொண்டுபோனால், ஊசிமுனைகள் ஒட்டிக்கொள்கின்றன. காந்தஊசியைப் பட்டுநூலினால் தூக்கி இரும்புப்பொடியிற் போகட்டுத் தொங்கவைத்தால், ஊசியினது இரு நுனிகளிலும் இரும்புப்பொடி செறிந்துநிற்கின்றது. ஊசியினது மையத்தில், இரும்புப்பொடி சிறிதும் ஒட்டவில்லை. இதிலிருந்து காந்தமானது ஊசியின் இரண்டு நுனிகளிலுமே செறிந்துநிற்கின்றது என்பது விளங்கும். காந்தம் செறிந்துநிற்கும் இவ்விரண்டு நுனிகளுக்கும் காந்தத்துருவங்கள் (Magnetic Poles) எனப் பெயர். தெற்குநோக்கிநிற்கும் துருவத்தைத் தென்துருவம் (South Pole) என்றும் வடக்கு

நோக்கிநிற்கும் துருவத்தை வட துருவம் (North Pole) என்றும் கூறுவார்கள். தென்துருவம் வடதுருவம் ஆகிய இரண்டுதானங்களையும் சேர்க்கும் நேர்கோட்டுக்குக் காந்த இருசு (Magneticaxis எனப்பெயர். படம் 40-ல், i காந்தஊசி; ii காந்தக்கழி iii காந்த லாடம். வ தே




படம் 40.

எனக் குறிப்பிட்ட புள்ளிகள் துருவங்கள். அவற்றுக்கிடையே வரைந்துள்ள புள்ளிக் கோடுகள் காந்த இருசுகள். காந்தக்கழியிலும், இலாடத்திலும், துருவங்கள் சற்று உள்ளடங்கியே இருப்பது நோக்கத்தக்கது. காந்தலாடம் வளைக்கப்பட்ட காந்தக் கழியேயென்பது எளிதில் விளங்கும். காந்தக்காம்பசு (Magnetic compass) என்பது ஒரு காந்த ஊசியேயாகும். அதனுடைய விஷயத்தைப் பின்னர்க் கூறுவோம். இவ்வமயம் இரும்பிற் காந்தத்தை ஊட்டும் வேறுவகைகளைச் சற்றுக் கூறுவோம்.

காந்தக்கல்லுக்குப் பதிலாக ஒரு காந்தக்கழியைக்கொண்டு ஊசியை உராய்ந்தால், அதில் ஏற்றப்படும் காந்தம் சற்று அதிகப்படும். ஒரே காந்தக்கழியைக்கொண்டு, அநேக இரும்புக்கழிகளைக் காந்தக்கழிகளாக்கலாம். இதனால், முதற்காந்தக்கழியிலுள்ள காந்தத்திற் சிறிதும் குறைவு ஏற்படாது. ஆனால் இந்த உராய்தன்முறையாற்கிடைக்கும் காந்திகளிற் காந்தபலம் (Magnetic Strength) மிகக் குறைவாகவே இருக்கும். அதிக சக்திவாய்ந்த காந்திகளை மின்சாரத்தைக்கொண்டே இயற்றுகிறார்கள். இம்முறையில் உபயோகிக்கப்படும் கருவியமைப்பு (Apparatus) படம் 41-ல் வரைந்தவாறு. க க என்பது ஒரு செப்புக்கம்பிச்சுருள். இச் சுருளானது கு கு என்னும் கண்ணாடிக் குழாயை உள்ளடக்கிநிற்கின்றது. இக் கண்ணாடிக் குழாயானது உள்ளேவைக்கப்பட்ட




படம் 41.

தே வ எனக் குறிக்கப்பட்ட இரும்புக்கழியைத் தாங்கிநிற்கின்றது. இந்தக் கழிக்குத்தான் காந்தம் ஊட்டவேண்டும். பா வென்பது ஒரு

மின்குப்பித்தொடர் (Battery of Electric Cells). கம்பிச்சுருளினது நுனிகள் இந்த மின்குப்பித்தொடரின் இறுதிகளில் (Terminals of the Battery) சேர்க்கப்பட்டிருக்கின்றன. கம்பியினூடே மின்சாரப் பிரவாகமானது (Electric Current) அம்புகுறிகளாற்காட்டிய வழியாகச் சென்றுகொண்டிருக்கிறது. கம்பிச்சுருளில் மின்சாரம் ஓடுவதால், இருப்புக்கழியிற் காந்தம் உண்டாகிறது. இப்படிக் கிடைத்த காந்தக்கழியில் வ என்னும் இடத்தில் வடதுருவமும், தே என்னுமிடத்தில் தென்துருவமும் ஏற்படும். மிகுந்த மின்சாரப்பிரவாகத்தை நீண்டகாலம் ஓடவைத்து வேண்டிய அளவு பலமுள்ள காந்தியை உண்டாக்கிக்கொள்ளலாம். சாதாரணத் தேனிரும்பினில் (Softiron) காந்தம் எளிதில் ஏறுமேயெனினும் சீக்கிரத்தில் அழிந்துபோகும். ஆனால் உருக்கு அல்லது எஃகு இரும்பினில் காந்தம் ஏறுவது சற்றுக் கடினமேயாயினும், காந்தத்தை அதில் ஏற்றிவிட்டால் நீண்டகாலம் வன்மைகுறையாது நிற்கும். எனவே, தேனிரும்பிலுள்ள காந்தத்தை நிலையற்றகாந்தம் எனவும் (Temporary Magnetism), எஃகிலுள்ள காந்தத்தை நிலைபெற்றகாந்தம் (Permanent Magnetism) எனவும் கூறுதற்குக்காரணம் விளங்கும். இப்பொழுது மின்சாரத்தைக்கொண்டு இயற்றப்பெற்ற நிலையற்றகாந்தியாகிய மின்சாரக்காந்தியின் (Electro-Magnet) அமைப்பினைச் சற்று விளக்குவோம்.



படம் 42.

படம் 42-ல் ஒரு மின்சாரக்காந்தி வரையப்பட்டிருக்கின்றது. தேனிரும்பினால் (Soft iron) காந்தியானது செய்யப்பட்டிருக்கிறது. ப என்னும் ஒரு சட்டத்தில் இரண்டுகழிகள் தூண்கள்போலப் பதிக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கழிகளின்மேல் வ தே எனக் குறிப்பிட்ட இரண்டு துண்டுகள் இணைக்கப்பெற்றிருக்

கின்றன. இவ்விரண்டு துண்டுகளுக்கு மிடையே சற்று இடைவெளி விடப்பட்டிருக்கின்றது. இக்காந்தியைக் காந்தலாடமாகக்கொள்ளுதல் பொருந்தும். துணியினால் நன்கு போர்த்தப்பெற்ற செப்புக்கம்பியைக் கொண்டு (With cotton covered copper wire) காந்தியின் இரண்டு கழிகளின்மீதும் இரண்டு தொடர்பான சுருள்கள் (two coils in series) இயற்றப்பட்டு, கம்பியின் ஒரு நுனி ஒரு மின்குப்பித் தொடரின் (பா) ஒரு இறுதிக்கும், கம்பியின் மற்றநுனி சா எனக் காட்டிய ஒட்டுச்சாவிக்கும் (Contact key) இணைக்கப்பட்டிருக்கின்றன. இந்தச்சாவியானது மின்குப்பித்தொடரின் மற்றொரு இறுதியோடு சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்தச் சாவியின் தலையில் விரலை வைத்து அழுத்தினால், மின்குப்பித்தொடருடன் இணைக்கப்பட்ட இம்மேற்பாகமானது, கம்பியோடிணைக்கப்பெற்ற சாவியின் கீழ்ப்பாகத்தின் மீது அழுத்தும். சாவியின் இருபாகங்களும் ஒன்றோடொன்று ஒட்டவே, மின்சாரப்பிரவாகமானது கம்பிச்சுருள்களில் ஓடுகின்றது. படம் 42-ல் மின்பிரவாகமானது இடது கழியில் அப்பிரதக்ஷிணமாகவும் வலதுகழியில் பிரதிக்ஷிணமாகவும் ஓடுவது அம்புநுனிகளை (arrow heads) நோக்க எளிதில் விளங்கும். மின்சாரம் இவ்வாறு சுருள்களில் ஓடிச்செல்லவே, தேனிரும்பினில் காந்தம் ஏறி வ என்னுமிடத்தில் ஒரு வடதுருவமும், தே என்னுமிடத்தில் ஒரு தென்துருவமும் ஏற்படுகின்றன. சாவியிலிருந்து விரலை எடுத்துவிட்டால், சாவியின் மேற்பாகம் கீழ்ப்பாகத்திலிருந்து பிரிந்துவிடுகிறது. கம்பிச்சுற்றில் (Electric circuit) பிளவு இவ்விதம் ஏற்படவே மின்சார ஓட்டமும் நின்றுவிடுகின்றது. மின்சார ஓட்டம் நின்றதும் இரும்பு தேனிரும்பாதலால், அதிலுள்ள காந்தம் எளிதில் அழிந்துபோகின்றது. ஒட்டுச்சாவியை (Contact key) மாற்றிமாற்றி அழுத்தியும் விடுவித்தும் செய்துபோனால், மின்சாரம் சற்று ஓடியும், சற்று நின்றும் சுருள்களினூடே செல்லும். இரும்புக்கருவியின் இறுதிகளில் துருவங்கள் முறையே மாறிமாறி உண்டாகியும் அழிந்தும்செல்லும். மின்குப்பிகளை அதிகமாகச்சேர்த்து மின்சாரத்தை மிகுதியாகச் சுருள்களினூடே ஓடவைத்தால் காந்தியில் மிகுந்த வலிமைபெற்ற துருவங்கள் ஏற்படும். மின்சாரம் நின்றதும் இத்துருவங்கள் அழிந்துபோம். ஆதலின் மின்சாரக் காந்தியானது (Electro-magnet) ஒருநிலைபற்ற வலிய காந்தியாகும்.

மின்சாரக்காந்திகள் விசித்திரவகைகளாக இயற்றப்பெற்றுப் பல்லாயிரம் வகைகளில் உபயோகப்படுத்தப்படுகின்றன. மின்சாரத்தைப்பற்றிய அதிகாரத்தில் இக்காந்தியைப்பற்றிக் கூறவேண்டி நேருமாதலால், ஈண்டு அதிகம் விவரிக்காது விடுவோம். இனி ஒரு எளிய காந்தக் காம்பசின் (Simple Magnetic compass) அமைப்பையும் துருவங்களின் இயல்புகளையும் சற்றுக் கூறி, ஈவிங்கு—வீபர் (Ewing-Weber Theory of Magnetisation) காந்தக்கொள்கையைக் கவனிப்போம்.



படம் 43.

எளிய காந்தக் காம்பசு (Simple Magnetic Compass):—இக் கருவி படம் 43-ல் வரைந்து காட்டப்பட்டிருக்கிறது. படத்தில், i மேல்பார்வை (Plan), ii தோற்றம் (Perspective view), iii குறுக்குப்பார்வை (Sectional view). கண்ணாடிமூடிகொண்ட ஒரு வட்டமான பித்தளை டப்பியின் அடித்தட மையத்தில், ஒரு சிறு கூரிய ஊசி நெட்டுக்குத்தாகப் பொருத்தப்பட்டிருக்கிறது. வ தெ எனக் குறிக்கப்பட்டிருப்பது ஒரு காந்த ஊசியாகும். இக் காந்தஊசியானது நடு அகன்றும் நுனிகள் கூர்மையாகவுமிருக்கின்றது. இது மெல்லிய எஃகுத் தகட்டினாலியற்றப் பட்டுக் காந்தம் ஊட்டப்பெற்றிருக்கின்றது. இவ் ஊசியின்மையத்தில் ஒரு சிறிய கண்ணாடிக்கிண்ணம் பொருத்தப்பட்டிருக்கிறது. இக் கிண்ணமானது, டப்பியின் மையத்திலுள்ள ஊசியின்மேல் கவிழ்க்கப்பட்டிருக்கிறது. இவ்விதமாக, இக்காந்தஊசியானது, முளின் மீது தாங்கப்பெற்று உராய்வுத்தடைகளின்றி (Frictional forces) சுற்றி அசைந்தாடும் இயல்பினதாயிருக்கின்றது. டப்பியின் அடித்தடத்து விளிம்பினில் ஒரு வட்டமான ஸ்கேல் (Scale) வரையப்பட்டிருக்கிறது. இந்த ஸ்கேலில் டிகிரிக்கோடுகளும், எட்டுத்திக்குகளும் குறிக்கப்பட்டிருக்கின்றன.

காந்தக் கவர்ச்சிகளும் எதிர்ப்புகளும் (Magnetic Attractions and Repulsions):—ஒரு காந்தக்காம்பசை எடுத்துக்கொள்க. ஒரு காந்தம் ஊட்டிய தையல்ஊசியை எடுத்து அதனைப் பட்டுநூலினால்

தொங்கவைத்து, அதனுடைய வடதுருவம் (North-pole) யாதென் பதைக் கண்டுபிடி. இக் காந்தஊசியானது, எந்தத் துருவத்தை ஒரு இரும்புத்துணுக்கின் சமீபத்திற்கொண்டுபோனாலும், அத்துணுக்கை இழுத்துக் கவர்கின்றது என்பதை முன்னரே கூறியுள்ளேம். இக் காந்த ஊசியானது காம்பசுக்குள்ளே வைக்கப்பட்டிருக்கும் காந்தஊசியைக் கவர்கின்றதா? அல்லது எதிர்த்துத் தள்ளுகின்றதா? என்பதை ஆராய்வோம். தையல்ஊசியின் வடதுருவத்தை மெதுவாகக் காம்பசி லுள்ள ஊசியின் தென்துருவத்தைநோக்கி அணுகச்செய்க. வட துருவம் தென்துருவத்தைக் கவர்வதைப் பார்க்கலாம். ஊசியின் வட துருவம் காம்பசு ஊசியின் தென்துருவத்தை அணுக அணுகக் கவர்ச்சி அதிகமாகிறது. அதிகமாகவே காம்பசு ஊசி, வெளியிலுள்ள ஊசியை நோக்கிச் சுழன்றுவருகின்றது. இதனால் கிடைப்பது யாதெனின், ஒரு வடதுருவம் தென்துருவத்தைக் கவர்ந்து இழுக்கின்றது என்பதேயாம். மேற்கூறியவாறே ஊசியினது வடதுருவத்திற்கும், காம்பசின் வட துருவத்திற்குமுள்ள நடவடிக்கையை ஆராய்ந்தால், ஊசியின் வட துருவம் காம்பசின் வடதுருவத்தை அணுக அணுக, காம்பசு சுழன்று, அதன் வடதுருவம் தையல் ஊசியின் வடதுருவத்தைவிட்டு விலகிக் கொண்டேபோகின்றது. ஆதலின், ஒரு வடதுருவம் மற்றொரு வட துருவத்தை எதிர்த்துத் தள்ளுகிறது என்று வெளிப்படும். இம்மாதிரி யாகவே, தையல் ஊசியின் தென்துருவம் காம்பசின் வடதுருவத்தைக் கவர்ந்து இழுக்கிறதென்பதையும், அதனுடைய தென்துருவத்தை எதிர்த்துத் தள்ளுகிறதென்பதையும் பரிசோதித்து அறிந்துகொள்ள லாம். இப்பரிசோதனைகளிரண்டாலும், ஒரேதன்மையான துருவங்கள் ஒன்றை யொன்று எதிர்த்துத்தள்ளுமென்பதும், இருவேறுதன்மையான துரு வங்கள் ஒன்றையொன்று கவர்ந்து இழுக்கும் என்பதும் விளங்கு கின்றது.

இனி, ஒரு இருப்புக்கழியை, ஒரு காந்தக்கழியின் துருவத்தினால் உராய்ந்து காந்தம் ஊட்டுங்கால் யாது நிகழ்கின்றதென்பதைச் சற்றுக் கூறுவோம். ஈங்கு யாம் கூறப்புகுவது ஈவிங், வீபர் என்ற இரண்டு ஆராய்ச்சியாளரது கொள்கையாகும். ஒரு இருப்புக்கழியில், காந்தக் கழியால் உராய்வதற்குமுன்னர், துருவங்களும் கிடையாது, இரும்புப் பொடியைக் கவர்ந்துகொள்ளும் சக்தியும் கிடையாது. காந்தக்கழியின்

ஒரு நுனியால், ஒரேதிசையாக இருப்புக்கழியை உராய்ந்ததும் துருவங்கள் ஏற்படுவானேன்? இக்கேள்விக்கு ஏற்றவிடையை ஆராய்ந்து ஈவிங்கு, வீபர் என்பவர்கள் ஒரு கொள்கையை அநுஷ்டித்தார்கள். அக்கொள்கை யாதெனின், இரும்பிலுள்ள ஒவ்வொரு அணுவும் (Molecule) ஒரு நுண்ணிய காம்பசு ஊசிபோன்று அகலமும் பருமனும் குறைந்து, அவற்றைவிட நீளம் அதிகரித்து, ஒருநுனியில் ஒரு வடதுருவமும், மற்ற நுனியில் ஒரு தென்துருவமும் அமைந்திருக்கின்றது, என்பதேயாம். இக்காந்த இயல்புகளோடுகூடிய இரும்பு அணுக்கள் வெற்று இரும்புக்கழியில் நிற்கும் நிலை படம் 44, i-லும், காந்தம் ஊட்டப்பெற்ற கழியில் நிற்கும்நிலை ii லும் வரைந்து காட்டப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு சிறுகோடும் ஒரு இரும்பு அணுவை உணர்த்துகின்றது. ஒவ்வொரு சிறுகோட்டிலும், அம்புநுனை வடதுருவத்தையும் (North-pole), அதல்லாதநுனி தென்துருவத்தையும் (South-pole) உணர்த்துகின்றது. வெற்று இரும்பினில் அணுக்காந்திகள் (Molecular Magnets) பலவாறாகக் கலந்து கிடக்கின்றன. ஒவ்வொரு வடதுருவத்திற்கருகே ஒவ்வொரு தென்துருவமாகக் கழியின் எப்பாகத்திலும் இவ்வணுக்காந்திகள் ஒன்றின் வலியை மற்றொன்று அழித்தவண்ணமாய்நிற்கின்றன. இதனாற்றான் வெற்று இரும்பினில் காந்தத்துணுக்குகள் இருந்தபோதிலும் இரும்புப் பொடியை இழுக்கும் சக்தி வெளிப்படவில்லை. இதே கழியை ஒரு காந்தக்கழியின் தென்துருவநுனியால் இடப்புறத்திலிருந்து வலப்புறமாகப் பன்முறை உராய்ந்துகொண்டால், காந்தியின் தென்துருவமானது, அணுக்களின் வடதுருவங்களைக் கவர்ந்து இழுத்து, தான் செல்லும் பாதையைநோக்கி ஒரேமுகமாகத் திரும்பிநிற்கும்படி செய்கின்றது. கழியில் காந்தம் நன்றாக ஏறியபின், அணுக்கள்நிற்கும் நிலை படம் 44 ii-ல் காட்டப்பட்டிருக்கிறது. அணுக்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்துநிற்கின்றன. இரும்புப்பொடியில் தோய்க்கப்பெற்ற ஒரு காந்தக்கழியில், மையத்தில் இரும்புப்பொடி ஒட்டாததற்குக் காரணம் படம் 44 ii-ஐப் பார்க்க விளங்கும். காந்தக்கழியின் நடுப் பாகங்களில், ஒவ்வொரு வடதுருவமும் ஒவ்வொரு தென்துருவத்தோடு



படம் 44.

சேர்ந்து நிற்றலால், அங்குக் காந்தசக்தி சூன்யமாகின்றது. ஆனால் கழியின் இருநுனிகளிலோ, ஒரேவகைத்துருவங்கள் சேர்ந்து நிற்கின்றன. ஒரு நுனியில் அநேகம் வடதுருவங்களின் சேர்க்கையால் ஒரு மிகுந்த வடதுருவமும், அதுபோலவே மற்ற நுனியில் மிகுந்த தென்துருவமும் ஏற்படுகின்றன.

காந்தமும் சக்தியின் பரிபாகமே (Magnetism is a form of Energy):—ஒரு வெற்று இரும்புக்கழியை, ஒரு காந்தக்கழியின் நுனியால் உராய்ந்து போகவே, ஒவ்வொரு அணுக்காந்தியும் (Molecular magnet) தானிருந்த நிலையிலிருந்து பெயர்க்கப்பட்டு ஒருகுறிப்பிக்கப் பட்ட நிலையில் வைக்கப்படுகின்றது. இவ்விதம் வைக்குங்கால் வடதுருவங்கள் தென்துருவங்களிலிருந்து விலக்கப்படுவது சகஜம். ஆனால் இவ்விதமாக ஒரு அணுவின் வடதுருவத்தை மற்றொரு அணுவின் தென்துருவத்தினின்றும் நீக்குங்கால், அவ்விரண்டுக்குமுள்ள கவர்ச்சியிழுப்பை எதிர்த்து வேலைசெய்யவேண்டும். இவ்வேலைசக்தியானது உராய்ந்த காந்தமூட்டும் பரிசோதகரால் அளிக்கப்பட்டு, இது காந்தம் எனப்படும் அடக்கசக்தியாக (Potential Energy) காந்தக் கழியினுள்ளே அடங்கியிருக்கின்றது என ஒருவாறு கொள்ளலாம். உயர்தர ஆராய்ச்சியால் இக்காந்தசக்தி காந்தியினுள்ளேமாத்திரமன்றிச் சுற்றியுள்ள வெளியிடத்திலும் நிரம்பியிருக்கிறது எனக் கிடைக்கிறது.

இக்காந்தசக்தியை வேலைசக்தியாக மாற்றலாம். ஒரு சிறு இரும்புத் துண்டை மேசைமேல் வைத்து, அதற்குமேல் சுமார் ஒரு அங்குல உயரத்துக்கப்பால் ஒரு காந்தக்கழியின் துருவமொன்றைநீட்டினால், அத்துண்டானது உயரப் பாய்ந்துசென்று காந்தக்கழியின் நுனியில் ஒட்டிக்கொள்ளுகிறது. இப்பரிசோதனையில், இரும்புத்துண்டினை மேலே உயர்த்துங்கால், அதனுடைய பளுவாகிய கீழ்நோக்கிய பூமியிழுப்பு ஒரு அங்குலதூரம் காந்தத்தின்கவர்ச்சிஇழுப்பால் எதிர்க்கப் பட்டு வேலை இயற்றப்படுகின்றது. இங்குக் காந்தசக்தி வேலைசக்தியாக மாற்றப்பட்டிருக்கிறது.

இனி மின்சாரம் ஆராயப்படும்.

[தொடரும்.]

ஸ்ரீ:

# ஓர் ஆராய்ச்சி.

தொல்காப்பியச் செய்யுளியல் 118-ம் சூத்திரமாகிய "நெடுவெண் பாட்டே குறுவெண்பாட்டே" என்ற சூத்திரவுரையில் உரையாசிரியர் (இளம்பூரணர்),

"சிற்றியாறு [1]பாய்ந்தாடுஞ் சேபரி யுண்கண்ணும்
வற்றா வளவயலும் வாய்மாண்ட வேரியும்
[2]பற்றூர்ப் பிணிக்கு மதிலும் படுகிடங்கும்
ஒப்ப வுடைத்தா யொலியோவா நீர்ப்புட்கள்
தத்தியிரைதேருந் தையலாய் நின்னூர்ப்பேர்
ஒத்துணரும் வண்ண முரைத்தி யெனக்கூறக்
கட்டலர் தாமரையு ளேழுங் கலிமான்றேர்க்
[3]கத்திரிய ரைவருங் காயா மரமொன்றும்
[4]பெற்றவழித் தேர்ந்துண்ணும் பேயி னிருதலையும்
வித்தாத நெல்லி னிறுதியுஞ் சேர்த்தக்கால்
ஒத்தியைந்த தெம்மூர்ப் பெயரென்றாள் வானவன்கை
[5]விற்பொலிந்த வெம்புருவத் தாள்."

என்ற செய்யுளை நெடுவெண்பாட்டிற் குதாரணமாகக் காட்டியுள்ளார். யாப்பருங்கலவிருத்தி யுரைகாரரும் "பாதம் பலவரிற் பஃறொடை வெண்பா" என்ற செய்யுளில் 9-ம் சூத்திரவுரையில் இச்செய்யுளையே பஃறொடைவெண்பாவுக்கு உதாரணமாகக்காட்டி "இது பன்னீரடியாற்

---

[1]பாய்ந்தொழுகும் என்பது செய்யுளியலுரைப்பாடம்.

[2]முற்றூப்பிணிக்கும் என்பது ஷை உரைப்பாடம்.

[3]சத்திரியர். க்ஷத்திரியர்; இது கத்திருவர் என்றும் கத்திரிவர் என்றும் சிதைந்து காணப்படுகிறது.

[4]பெற்றவிழ்தேர்ந்துண்ணுத என்பது யாப்வி பாடம்.

[5]விற்பொழித்த வேற்புருவத்தான் என்பது ஷை உரைப் பாடம்.

[1]பெருவல்லத்தைச்சொன்ன பஃறொடை வெண்பா" எனக் குறித்துள்ளார்.

இச்செய்யுளின்பொருளை யாராயப்புகுந்து "பெயர்விழையான்" என்பார் செந்தமிழ், தொகுதி 16-பகுதி-2-ல் "பெருவல்லம் ஓர் நாற்பெயராமா" என்ற தலைப்புடன் ஓர் ஆராய்ச்சியுரை விரிந்த முன்னுரையுடன் வரைந்துள்ளார். அம்முன்னுரையின்கண் அவர், தம் 'நண்பர் சிலர்க்கும் பண்டிதர் இரண்டொருவர்க்கும் இச்செய்யுளின்பொருளைப் பற்றி எழுதியதில் அவர்கள் ஒருபோக்காக எழுதி வந்தனத்துடன் திருப்பியனுப்பினர்' என்றுகூறிக்கொண்டு மேலே தங்கருத்தாகக் கூறுவது பின்வருமாறு:—

"மாட்டு:—சேயரியுண்கண்ணாய்! தையலாய்! நின் ஊர்ப்பேர் உரைத்தி எனக் கூற, புருவத்தாள் ஏழும், ஐவரும், ஒன்றும், இருதலையும், 'இறுதியும் பெற்றக்கால் இயைந்தது என்றாள் எனக் கூட்டி முடித்துக் கொள்க.

| | | |
|---|---|---|
| பொருள்:—ஏழு—பகரத்தில் ஏழாவது எழுத்து | ... | பெ |
| ஐவர்—ரகரத்தில் ஐந்தாவது | | ரு |
| ஒன்று—வகரத்தில் முதலாவது | | வ |
| இருதலை { லகரத்தில் ஒருதலை | | ல் |
| ஷை மற்றோர் தலை | | ல |
| இறுதி—மகரத்தில் இறுதி | | ம் |

ஒத்தியைந்தவாறு:—"பெருவல்லம்" என்பது எனக் கூறினர்.

இதனைக் கண்ணுற்ற எனது நண்பர் சிதம்பரபுன்னைவனநாத முதலியாரவர்கள் இதற்கு மறுப்பாக, செந்தமிழ்த்தொகுதி, 16, பகுதி 6-ல் பின்வருமாறு எழுதினர்.

"சிற்றியாறு.......வேற்புருவத்தாள்' என்ற.......செய்யுளின் பொருளை விரித்து, கட்டலர்தாமரை, கலிமான்றேர்க்கத்திருவர், காயா

[1] இங்கு "இது பன்னீரடியான்வந்த பஃறொடைவெண்பா" என்பதே யமைவதாயிருக்கவும் "பெருவல்லத்தைச்சொன்ன" என வேண்டா கூறினர். இங்ஙனமுரைத்திலரேல் இதன் பொருளறிதல் எவ்வாற்றானு மரிதாம். பிறிதோர் பயன்கருதி இங்ஙனங்கூறுவது சில வுரையாசிரிய ரியல்பு.

மரம், பெற்றவழித் தேர்ந்துண்ணும் பேய், வித்தாதநெல் ஆகிய இவ் வைந்து தொடர்களும் இன்னின்னபொருளைக்குறிப்பன என்பதை விளக்கி, எழு, ஐவர், ஒன்று, இருதலை, இறுதி என்பவை இன்னின்ன சொற்களினின்றும் எடுக்கப்பெற்றுப் பெருவல்லம் என்று புணர்க்கப் படும் என்பதை விரித்துக்காட்டாது வாசிப்போரை மயங்கவைத்தது விசனகாமானது. நம் நண்பர் பெருவல்லம் என்றது ஷ செய்யுளி னின்றும் இன்னவாறு பெறப்படுவது என்பதைக் கூடியவிரைவில் விளக்குவாராக" என்று எழுதினர்.

பின்னும், செந்தமிழ்த்தொகுதி, 16, பகுதி 7 ல் எனது நண் பர் கனகராஜையரவர்கள், "அறியாமை வினு" என்று தலைப்பிட்டு எழுதியதன் இறுதியில் இதைக்குறித்து,—

"சிற்றியாறு......வேற்புருவத்தாள்" என்றசெய்யுளிற் குறிப் புப்பொருள் குறித்த தெவ்வாறு?

(1) கட்டலர் தாமரையு ளேழென்ரு லென்னை?

(2) கத்திருவர் ஐவர் யாவர்?

(3) காயாமரமொன்று என்பதிற் குறிப்பென்னை?

(4) பேயிணிருதலை என்பதன் உட்கிடையென்ன?

(5) வித்தாதநெல்வி னிறுதியாவ தியாது?

இவ் வைந்தும் சேர்த்துப் பெறும் மொழியாது? யாப்பருங் கலவிருத்தியுரையாசிரியர் "பெருவல்லம்" என்னும் ஊர்ப்பெயரை எவ்வாறு அறியவைத்தார்?

அப்பெருவல்லம் என்னும் பெயரைக் கொணர்தற்பொருட்டு (ப-ர-வ-ல-ம) இம்மெய்களை எங்கிருந்து பெறலாம்? இம்மெய்களை எடுத்தாண்டு குறிப்பை வெளிப்படுக்கச் செய்யுளில் அதிகாரமுண்டோ? இவ் வெழுத்துக்களைக் குறிப்பித் தேதேனும் அச்செய்யுளில் வந்திருப் பின் தெரிவிக்கவேண்டுகிறேன். அன்றி வேறு வகையாற் பொரு ளுணரக்கூடுமாயின் அதையும் அறிவானுயர்ந்தோர் அறிவிப் பாராக."

என்று பல வினுக்களை யெழுப்பினர். பெயுர்விழையான் விடை யாதுங் கூறவில்லை. யாரும் எம் முடிவுங் கூறவில்லை. இது விஷயம் இம்மட்டோடு அடங்கிவிட்டது. யானும் இவற்றை யெல்லாம் நோக்கிய பொழுது பலவாறு சிந்தித்ததுண்டு. கட்டலர் தாமரையுள் ஏழு என்பது தாமரையைக் குறிக்கும் ஏழுக்கு மேற்பட்ட எழுத்துக்களையுடைய ஒரு சொல்லில் "பெ" என்ற எழுத்து ஏழாவது எழுத்தாய் அமைந்திருக்கவேண்டு மென்றும், மற்றவையும் அவ்வச்சொற்களில் அப்படியே அமைந்திருக்கவேண்டுமென்றுங் கருதிச் சிலபொழுது முயன்று நிறைவேறுமையாற் பயனில்முயற்சியென்று கைவிட நேர்ந்தது. இருந்தாலும் இதைக் கண்டறியவேண்டு மென்னும் அவா நீங்கவில்லை. சமீபத்தில் தொல்காப்பியச் செய்யுளியலுரையைத் திருப்பியபொழுது இச்செய்யுள் தென்பட்டது. உடனே "கட்டலர் தாமரை" முதலியவற்றிலே சிந்தனை செல்வதாயிற்று. புதிய வழியொன்று தென்பட்டது. முன் நினைத்ததுபோல் இச்செய்யுளின்பொருள் அவ்வளவு சிரமப்பட்டறியத்தக்கவாறு அமைந்திருக்கவில்லை யென்பதும் தெரிந்தது. ஒருவாறு முடிவும் ஏற்பட்டது. எனது சிற்றறிவிற்கெட்டிய அம்முடிபைக் கீழே தருகின்றேன். அறிஞர் பொருந்துமேற் கொள்க. அன்றாயின் எனது இப்பிழையைப் பொறுத்துத் தமது கருத்துக்களை என்போன்ருர்க்குப் பயன்படும்படி இச்செந்தமிழ் வாயிலாக வெளியிடுவாராக.

(பொழிப்புரை) 'சிறிய கான்யாற்றிலே குதித்து விளையாடுகின்ற செவ்வரிபடர்ந்த மையுண்டகண்ணினை யுடையாய்!, தையலாய்! குறையாத வளப்பமுடைய வயல்களும், வருவாயான் மாட்சிமைப்பட்ட ஏரியும், பகைவரை யகப்படுத்துகின்ற மதில்களும், ஆழ்ந்த அகழும் தக்கவாறுடையதாய், ஒலியடங்காத நீர்ப்பறவைகள் தவழ்ந் திரைதேடுகின்ற நினதூரின்பெயரை யாம் பொருந்த அறியும்படி உரைப்பாய்' என்று கேட்க (அதற்கு) சேரனது வில்லைப்போல் விளங்குகின்ற கொடிய புருவமுடையாள், 'கட்டவிழ்ந்த தாமரையுள் ஏழும், செருக்கினையுடைய குதிரைகள் பூட்டப்பட்ட தேரையுடைய மந்திரியர் ஐவரும், காயாமரம் ஒன்றும், பெற்றவிடத்து இரைதேடி யுண்கின்ற பேயினது இருதலையும், வித்தாத நெல்லினது இறுதியும் (ஆகியவற்றைச்) சேர்த்தாற் பொருந்தி வந்தது எமது ஊர்ப்பெயராம்' என்று கூறினாள் என்பது இதன் திரண்ட பொருள்.

இனி, இதனூற் பெருவல்லம் என்னும் பெயர் பெறப்படுமாறு:—

"கட்டலர்தாமரை" யென்பதில் "கட்டலர்" என்பதும் கலிமான்றேர்க் கத்திரியர் என்பதில் "கலிமான்றேர்" என்பதும், "பெற்றவழித்தேர்ந்துண்ணும் பேய்" என்பதில் "பெற்றவழித் தேர்ந்துண்ணும்" என்பதும், இயற்கை யடைமொழிகள். "வித்தாத நெல்" என்பதில் வித்தாத என்பது பிறிதினியைபு நீக்கிய அடை.

"தாமரை" யென்பது இங்கு அதன் பரியாய நாமமாகிய "பங்கயம்" என்பதைக் குறிக்க, "ஏழு" என்பது அச்சொல்லின் முதலிலுள்ள பகாவர்க்கத்தின் ஏழாவது எழுத்தாகிய "பெ" என்பதைக் குறித்தது. எனவே "கட்டலர்தாமரையு ளேழு" என்பது "பெ" என்னு மெழுத்தைக் குறிப்பா லுணர்த்துவதாயிற்று.

"கலிமான்றேர்க்கத்திரியரைவர்" என்பதில் கத்திரியர் என்பது அதன் பரியாய நாமமாகிய அரசர் என்பதைக் குறிக்க ஐந்து என்பது அதிலுள்ள ரகாத்தி ஐந்தாமெழுத்தாகிய "ரு" என்னு மெழுத்தைக் குறித்தது. கத்திரியர் என்றதற்கேற்ப "ஐவர்" என்று உயர்திணையாற் கூறினர். கத்திரியர்—க்ஷத்திரியர் = அரசர்.

"தாயாமா" மென்பது அதன் பரியாயமாகிய "பூவை" யென்னும் பெயரைக் குறிக்ச, ஒன்று என்பது அதிலுள்ள (வை) வகாவர்க்கத்தின் முதலெழுத்தாகிய "வ" என்னும் எழுத்தைக் குறித்தது.

"பேய்" என்பது அதன் பரியாய நாமமாகிய "அலகை" என்பதைக்குறிக்க(அதன்) "இருதலை" யென்பது அதிலுள்ள லகாத்தினிறுதியும் முதலுமாகிய "ல்-ல" என்னு மெழுத்துக்களைமுறையே குறித்தது.

"வித்தாத நெல்" என்பது, விதைத்து விளையாமல் தானே விளையும் நெல்லின் பெயராகிய நீவார மென்பதைக் குறிக்க, "இறுதி" என்பது அதிலுள்ள மகாத்தின் இறுதியாகிய "ம்" என்னும் எழுத்தைக் குறிப்பதாயிற்று.

இனி, "சேர்த்தக்கால்" என்று செய்யுளிற் கூறியவண்ணம் இவற்றைச்சேர்த்தால் பெ-ரு-வ-ல்-ல-ம் = "பெருவல்லம்" என ஒத்தியைந்தவாறு கண்டுகொள்க.

இனி, வற்றுவளவயல் முதலிய அடைகளானும் "நின்னூர்ப்பேராத்துணரும் வண்ண முரைத்தி" என்ற வினுவானும், ஒத்தியைந்த தெம்மூர்ப் பெயரென்றுள் என்ற விடையானும் இங்குக் குறிக்கப்பட்ட பெருவல்லம் என்பது ஓரூர்ப்பெயரென்பது வெள்ளிடைமலையாம்.

ரா. இராமையங்கார்,
தலைமைத்தமிழாசிரியன்,
ஸௌராஷ்ட்ரஹைஸ்கூல், மதுரை.

ஸ்ரீ:

# மதிப்புரை.

திருப்பரங்குன்றமென்னும் திருப்பரங்கிரிப்புராணம்:—இது, ஸ்ரீ நிரம்பவழகியதேசிகரால் அருளிச்செய்யப்பெற்றது. மதுரைத் தமிழ்ச்சங்கவித்வான் ஸ்ரீ மு ரா. அருணாசலக்கவிராயரவர்கள் இதனை அரிதிற் பரிசோதித்து அச்சிட்டிருக்கின்றனர். மிகச்சிறந்ததொரு பொழிப்புரையும் இதற்கு அவர்கள் எழுதியுதவியிருப்பது பாராட்டத்தக்கது. இஃது எல்லாரும் எளிதாக வாசித்துப் பயன்பெறத்தக்கதாகையால், தமிழபிமானிகளும் சைவசமையப்பற்றுள்ளவர்களும் இதனைப் பெரிதும் ஆதரிப்பரென்பதிற் சிறிதும் ஐயமில்லை விலை ரூ. 1–4–0: திருப்பரங்குன்றத்தில், வித்வான் ஸ்ரீ. மு. ரா அருணாசலக்கவிராயரவர்களிடம் பெறலாம்.

தமிழ்ப்பேரகராதி:—சென்னைச் சருவகலாசங்கப்பிரசுரமாகிய இவ்வகராதியின் மூன்றாந்தொகுதியில் நான்காம் பகுதி இப்பொழுது வெளிவந்துள்ளது இதில் 'செம்பக்கால்' என்பது முதல் 'தம்பனகாரன்' என்பதிறுதியாகவுள்ள சொற்களுக்கு மேற்கோள்களுடன் தெளிவாகப் பொருள் விளக்கப்பட்டிருக்கிறது. 160 பக்கங்கள்கொண்ட இப்பகுதியின் விலை ரூ. 2–0–0. வேண்டுவோர், 'The Madras Law Journal office, Post box 604 Mylapore Madras' என்ற விலாசத்திற் பெறலாம்.

சுக்கிலவருஷவாக்கிய பஞ்சாங்கம்:—இது, பல ஆண்டுகளாகப் பெயர்பெற்றுவிளங்கும் யாழ்ப்பாணம் சோதிடபரிபாலனமடத்தின் ஆதரவில், கணிக்கப்பெற்றது. பஞ்சாங்கங்களில் அமைதற்குரிய பல வகைக்குறிப்புக்களும் உடையதாய் யாவர்க்கும் இன்றியமையாதவாறு சோதிட அறிவைவளரச்செய்வதாகையால் மற்றவற்றினும் இது மிகச் சிறந்ததென்பது தானேவிளங்கும். இதன் விலை அணா 4: வேண்டுவோர்; (இலங்கை) கொக்குவில் சோதிடபரிபாலனமடம், இ. சி. இரகுநாதையரவர்களுக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

அமிர்தம்:—இஃது ஓர் இனிய துப்பறியும் தமிழ்நவீனம். மேலைச்சிவபுரி, திரு. சொ. பழனியப்பசெட்டியாரவர்களால் எழுதப்பட்டது. தெளிவான தமிழ்நடையிற் பலரீதிகளைப் புகட்டுவது. விலை அணா 8: விலாசம் "சன்மார்க்கசபை, மேலைச்சிவபுரி (மணப்பாறை வழி S.I.R.)"

# தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு.

தமிழ் லெக்ஸிகனாபீஸ் உதவிப்பதிப்பாசிரியர்
ப்ருஹ்மஸ்ரீ P. S. சுப்பிரமணியசாஸ்திரி (M.A., L.T.,) அவர்கள்
எழுதுவது.

(௬௪-ஆம் பக்கத் தொடர்ச்சி)

235-வது சூத்திரம். அவற்றொடு வருவழிச் செய்யுமென் கிளவி
முதற்கண் வரைந்த மூவீற்று முரித்தே.

இச்சூத்திரவுரையில் முற்றுச்சொல்லிற்கும் எச்சத்திற்கும் வேற்
றுமைகூறுமிடத்துச் சேனாவரையர் 'பிறிதோர்சொல்லோ டியையாது
தாமே தொடராதற்கேற்கும் வினைச்சொல் முற்றாம்' என்றார். இதனை
நச்சினார்க்கினியர் பின்வருஞ் சொற்றொடரால் மறுத்தனர்:—"பெயர்
பற்றிநில்லாது தாமேயுந் தொடர்ப்பொருளுணர்த்திமுற்றிநிற்குமெனச்
சேனாவரையர் கூறினாரெனின் சாத்தற்குச் சோறிடுக என ஒரு
வன் ஏவியவழி, அவ்வேவப்பட்டான் அவற்கு அதனை ஈத்துவந்து
உண்டானென்றவழி, யான்கூறிய சாத்தனுண்டானென வினைமுதற்
றொடர்ப்பொருள் அவன் மனத்தின்கண் உணர்த்திநிற்பதல்லது நன்
மக்கள் குழீஇயவழி ஒருவன் வந்து நின்று உண்டானென்றவழி,
அவ்வினைமுதற்றொடர்ப்பொருளுணர்த்தாது பால்மாத்திரம் உணர்த்தி
நிற்குமென்பது கருதி 'எத்திறத்தானும் பெயர்முடிபினவே' என்றாராக
வின் அது பொருத்தமின்றென்க" சேனாவரையர் பிறிதோர் சொல்லோ
டியையாது என்றாரல்லது பெயர்பற்றிநில்லாது என்று கூறவில்லை
இயையாது என்பதற்குத் தழுவாது என்றே அவர் பொருள் கொண்
டிருக்கவேண்டும். மேலும் 'வழங்கியன் மருங்கிற் குன்றுவ குன்றும்'
என்னுஞ்சூத்திரவுரையிற் 'குன்றத்தகுவனவாவன செயப்படுபொருளும்
ஏற்பதும்பயனுமாம்' என்று அவரே கூறியிருப்பதால், வினை
முதலோடுதான் வினைமுற்று, தொடராதற் கேற்கும் என்பதே அவ
ரது கொள்கை என்பதில் ஐயமில்லை. 'எத்திறத்தானும் பெயர்முடி
பினவே' (தொல். சொல். 429) என்ற சூத்திரத்தில் வெவ்வேறு முற்றுக்

கள் சேர்ந்துவருமிடத்து முற்றுவினைகள் மற்ற வினைகளோடு முடியாது, ஒவ்வொன்றும் பெயரோடுதான் முடியுமென்பது கூறியுள்ளதல்லது முற்றுவினை பெயரொடு முடியும் என்பது விதிக்கப்படவில்லை. அது, 'வினையே..........' (தொல். சொல். 112), 'அவை தாம்—வழங்கியல் மருங்கின்...' (தொல் சொல். 113) என்னுஞ் சூத்திரங்களாற் குறிக்கப்படுள்ளது.

236-வது பெயரெஞ்சு கிளவியும் வினையெஞ்சு கிளவியு
சூத்திரம். மெதிர்மறுத்து மொழியினும் பொருணிலை திரியா.

இச்சூத்திரவுரையில் 'முற்றுச் சொற்களையெல்லாம் ஈறுபற்றி ஓதினாராகலின் எதிர்மறையும் ஆண்டேயடங்கும்' என்றார், உரையாசிரியர். 'விதிவினைக்கும் எதிர்மறைவினைக்கும் பொதுவாக ஈறுபற்றி ஓதியதல்லது விதிப்பொருளவாகிய வாய்பாடுபற்றி ஓதாமையின், ஆண்டுக் கட்டுரையில்லையென்க' என்றார் சேனாவரையர். 'இனிச்செய்புமென்னும் முற்றிற்கும் உண்ணாளவள், உண்ணாதது என வரும் மறை ஒன்றெனமுடித்தலாற் கொள்க' என்றார் நச்சினார்க்கினியர். உரையாசிரியர், சேனாவரையர் இவ்விருவரும் கூறிய காரணத்தாலே நச்சினார்க்கினியர் கூறுவதும் அடங்கும்போது ஒன்றென முடித்தலாற் கொண்டதற்குக் காரணம் நன்கு புலப்படவில்லை.

239-வது செய்தே னெச்சத் திறந்த கால
சூத்திரம். மெய்திட னுடைத்தே வாராக் காலம்

இச்சூத்திரவுரையில் வாராக்காலம் என்பதற்கு உரையாசிரியர் நிகழ்காலமும், எதிர்காலமும் என்று பொருள்கொண்டார். சேனாவரையர் எதிர்காலம் என்றே பொருள்கொண்டார். நச்சினார்க்கினியர் எதிர்காலம் என்று பொருள்கொண்டு, உபலக்கணத்தால் நிகழ்காலத்தையும் அது குறிக்கின்றது என்றார். வாராக் காலத்து நிகழுங் காலத்தும்......... (தொல். சொல். 241) என்னுஞ் சூத்திரத்தை நோக்குமிடத்து, வாராக்காலம் என்பதற்குச் சேனாவரையர்கூறியதே ஆசிரியர் தொல்காப்பியனாருக்குங் கருத்தென்று தோன்றுகின்றது.

மிக்கதன் மருங்கின் வினைச்சொற் சுட்டி
242-வது யப்பண்பு குறித்த வினைமுதற் கிளவி
சூத்திரம். செய்வ தில்வழி நிகழுங் காலத்து
மெய்பெறத் தோன்றும் பொருட்டா கும்மே.

இச்சூத்திரத்தில் 'செய்வதில்வழி' என்பதற்கு உரையாசிரியர் செய்கைமுடியாதநிலைமைக்கண் என்று பொருள்கொண்டார். சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் சுட்டிச்சொல்லப்படுவதோர் வினைமுதலில்லாதவிடத்து என்று பொருள்கொண்டனர். சேனாவரையர் 'செய்வது என்பது செய்கையை யென்பாருமுளர்' என்று பக்ஷாந்தரமாகவுங் கூறினர். முன்னர்ச் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் கூறியுள்ள பொருளே தக்கது; ஏனெனில் 'செய்வது' என்னுஞ் சொல்லை வினைமுதல் என்னும் பொருளிலேயே 'வினையே செய்வது செயப்படு பொருளே..........' (தொல். சொல் 112) என்னுஞ் சூத்திரத்தில் ஆசிரியர் கூறியுள்ளார்.

வினையியல் முற்றிற்று.

---

## இடையியல்.

249-வது சூத்திரம். இடையெனப் படுப பெயரொடும் வினையொடு
நடைபெற் றியலுந் தமக்கியல் பிலவே.

இச்சூத்திரத்திற்கு உரையாசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் இம்மூவரும் ஒரேவிதமாகப் பொருள்கொண்டனர்.

### இடைச்சொல் என்று குறியிட்டதற்குக் காரணம்.

சேனாவரையர் 'மொழிக்கு முன்னும் பின்னும் வருமாயினும் பெரும்பான்மையும் இடைவருதலின் இடைச்சொல்லாயிற்று' என்றார். நச்சினார்க்கினியரும் அவ்வாறே கூறியுள்ளனர். ஆனால் இடைச்சொற்கள் பெரும்பான்மையும் மொழிக்கு இடையில் வருகின்றனவா என்பதை ஆராயுமிடத்து, அவ்வாறு இல்லையோ என்ற ஐயம் உண்டாகின்றது. இடைச்சொற்களாவன சாரியைகள், அன், ஆன் முதலிய வினைவிகுதிகள், ஐ, ஒடு, கு முதலிய வேற்றுமை யுருபுகள், அசைநிலைக்கிளவிகள், இசைநிறைக்கிளவிகள், தத்தங்குறிப்பாற் பொருள்செய்புங்கிளவிகள், ஒப்பில்வழிபாற் பொருள்செய்புங் கிளவிகள் என்ற இவையே. இவற்றில் வினைவிகுதிகளும், வேற்றுமையுருபுகளும், எப்போதும் மொழியின் இறுதியிலும், அசைநிலைக்கிளவி இசைநிறைக்கிளவி என்ற இரண்டும் பெரும்பாலும் மொழிக்கு முதலிலும் அல்லது இறுதியிலும், சாரியைகள் எப்போதும் மொழிக்கு இடையிலும், தத்

தங்குறிப்பாற் பொருள்செய்யுங்கிளவிகளும், ஒப்பில்வழியாற் பொருள் செய்யுங்கிளவிகளும் தனிமொழிபோன்று வாக்கியத்தினிடையிலும் வருவதாலும், சாரியைகளின் எண்ணிக்கை மற்றெல்லாவற்றின் எண்ணிக்கையைவிட மிகுதியாயில்லாததாலும், இடைச்சொற்களெல்லாம் பெரும்பான்மையும் மொழிக்கு இடையில் வருவதைக் காணோம். அவ்வாறிருக்க, ஆசிரியர் தொல்காப்பியனார் இடைச்சொல்லென்று குறியிட்டதற்குக் காரணம் பெரும்பாலும் அவை வாக்கியத்தின் இடையிலே வருகின்றன என்பதுபோலும்.

### பெயரொடும் வினையொடு நடைபெற்றியலுந் தமக்கியல் பில என்பதன் பொருள்.

சேனாவரையர் 'ஈண்டுப் பெயரும் வினையு முணர்த்தும் பொருளைச் சார்ந்து நின்று அவற்றை வெளிப்படுப்பதல்லது, [1]தமக்கெனப் பொருளுடையவல்ல' என்று கூறுகின்றார். நச்சினார்க்கினியரும் அவ்

1 இடைச்சொல்லெல்லாம் துயோதகமே (ஜ்யோதகம்) வாசகம், (வாசகம்) அல்ல என்று அவர்கருத்து. ஒவ்வொரு தாதுவுக்கும் எப்பொருளுமுண்டு என்பதும், அவற்றின்முன் உபசருக்கம் (உபஸர்கம்) வந்தால், அது அத்தாது எப்பொருளில் வந்துள்ளது என்பதைக் குறிக்கின்றதேதவிர, அதற்கு அது பொருளன்று என்பதும் வடமொழிவியாகரணத்தின் சித்தாந்தம். 'உபஸர்காணாம் ஜ்யோதகத்வமேவ, ந து வாசகத்வம்' என்பது காண்க. உதாரணமாக, 'ஸ்ருதி' என்பதற்கு எல்லா வினைப்பொருளுமுண்டு. 'அவஸ்ருதி' என்னுமிடத்து 'அவ' என்ற உபசருக்கம், இங்கு 'ஸ்ருதி' என்பதற்கு அறிகிறன் என்று பொருள் என்பதைக் காட்டுகின்றது. அவ்வாறே வேற்றுமையுருபுகளும் துயோதகமென்பது, சுவார்த்தம், திரவியம், இலிங்கம், சங்கியை, காரகம் இவ்வைந்தும் பிராதிபதிகனுக்குப்பொருள் (ஸ்வார்த்தத்ரவ்யலிங்கஸங்க்யா - காரகாஃ பஞ்சகம் ப்ராதிபதிகார்த்தஃ) என்ற கொள்கைகொண்ட சில வடமொழி இலக்கணவாசிரியர்களின் சித்தாந்தம். இதனை மனத்தில்வைத்துக்கொண்டுதான் சேனாவரையர் இங்கு இவ்வாறு கூறுகின்றனர். ஆனால் வடமொழியிலக்கணவாசிரியருள் பெரும்பான்மையோர் வேற்றுமையுருபுகளும், காலங்காட்டுவனவும் வாசகங்களே என்று கொண்டுள்ளார். அவற்றைச் சொல்லாக ஒரு இலக்கணவாசிரியருங் கொள்ளவில்லை. சொல்லாகவே கொண்டனர் தருக்கநூலார்.

வாறே கூறுகின்றனர். அவர்களின்கருத்தைப் பின்வருமாறு விளக்க லாம்:—இரண்டாம்வேற்றுமைப்பொருள்முதல், ஏழாம் வேற்றுமைப் பொருள் முடியப் பெறும்யோக்கியதை மரம் முதலிய பெயர்களுள்ளே இருப்பதால், 'மரத்தை' என்னுமிடத்து 'ஐ' யுருபு மரம் செயப்படு பொருளேயொழியக் கருவி முதலியன அன்று என்று காட்டுகின்றது: அவ்வாறே, நட என்னும் வினைமுதனிலைக்கு எல்லாக்காலமும், எல்லா விடமுங் காட்ட யோக்கியதை யிருப்பதால், நடந்தான் என்னுமிடத்து 'ஆன்' விகுதி இங்கு 'நட' என்பது படர்க்கையாண்பாலையொழிய மற்றைப் பாலிடங்களை யுணர்த்தவில்லை என்பதையும், காலவெழுத்து முன்னமே தொழில் நடந்துவிட்டதே தவிர, இப்பொழுது நடக்கின்ற தாவது இனி நடக்கப்போகின்றதாவது அன்று என்பதையுங் காட்டு கின்றன. இவ்வாறே ஒருவினையில், பிரிநிலை, வினா, எதிர்மறை முதலிய வற்றைக் காட்ட யோக்கியதை யிருப்பதால், ஏ, ஓ, என்ற இடைச்சொற் கள், இச்சந்தருப்பத்தில் இப்பொருளையே அவ்வினைகள் உணர்த்து கின்றன என்று காட்டுகின்றன. இவ்வாறு ஆங்கு என்ற பொருளில் வரும் அந்தில், தஞ்சம் என்பவை முதலிய தத்தங்குறிப்பிற் பொருள் செய்யுங்கிளவிகளுக்குச் சொல்ல இயலாது என்று தோன்றுகின்றது. ஆதலால் 'பெரும்பாலும் பெயரும் வினையு முணர்த்தும் பொருளைச் சார்ந்துநின்று அவற்றை வெளிப்படுப்பதல்லது தமக்கெனப் பொரு ளுடைய வல்ல' என்பதே அவ்வுரைகாரின் கருத்துப்போலும்.

'சார்ந்து வருதல் உரிச்சொற்குமொத்தலின், தமக்கெனப் பொரு ளின்மை இடைச்சொற்குச் சிறப்பிலக்கணமாம்' என்று சேனாவரையர் கூறுகின்றனர். இடைச்சொல்லின் சார்ந்துவருகையும் உரிச்சொல்லின் சார்ந்துவருகையும் ஓரேவிதமானதல்ல. இடைச்சொல் பெயருக்கும் வினைக்கும் உறுப்பாயாவது, அவற்றைத் தழுவிக்கொண்டாவது வரும்; உரிச்சொல் தனது உருவம் மாறியும், மாறாதும், பெயராயாவது, வினையா யாவது முறையே உருபேற்றும், காலக் கிளவிபெற்றும் வரும். ஆதலால் இடைச்சொற்கும் உரிச்சொற்கும் சார்ந்துவருதலாகிய ஒப்புமை சொல் லாலே தவிரப் பொருளாலன்று. தஞ்சம் என்பதற்கு எண்மை பொரு ளென்றும் (தொல். சொல். 266), அந்தில் என்பதற்கு ஆங்கு என்பது பொருளென்றும் (தொல். சொல் 267) ஆசிரியர் தொல்காப்பியனார் கூறி

யிருப்பினும், தமக்கெனப் பொருளின்மை இடைச்சொற்குச் சிறப்பிலக்கணம் என்று உரைகாரர்கள் கூறுவது பெரும்பான்மைபற்றி என்க.

"இடைச்சொற் கிளவியு முரிச்சொற்கிளவியு-மவற்றுவழி மருங்கிற் றோன்று மென்ப" (தொல். சொல்-159) என்னுஞ் சூத்திரத்தால் இடைச்சொல் பெயரும் வினையுஞ்சார்ந்து வருமென்னும் வேறுபாடு அதனாற் பெறப்படாது. என்னை? இடைச்சொல் பெயர்சார்ந்தும் உரிச்சொல் வினைசார்ந்தும் வரினும் அவற்றது சிறப்பின்மையுஞ் சொல் நான்காதலும் உணர்த்துதல் சிதையாதாகலான் என்பது ஒருரை' என்று சேனாவரையர் கூறுகின்றனர். இவ்வுரையின்படி 'இடைச்சொற்கிளவியும்......'(தொல். சொல். 159)என்ற சூத்திரத்தாற் சொல்லைக்குறித்து இடையுரிச்சொற்களும், அவற்றின் சிறப்பின்மையும் விதிக்கப்படுகின்றன என்று கொள்ளவேண்டும். அவ்வாறு கொள்ளின் வாக்கியபேதம் என்ற குற்றம் வரும். ஆதலால் அவற்றுவழி மருங்கின் இடையுரிச்சொற்கள் தோன்றும் என இடையுரிச்சொற்களை விதேயமாக்கிப் பொருள் கொள்ளவேண்டும். அவ்வாறுகொள்ளின் அவற்றுவழி மருங்கிற்றோன்றும் என்பதற்கு இடைச்சொல் பெயரைச்சார்ந்தும் உரிச்சொல் வினையைச்சார்ந்தும்வரும் என்று முறையே அந்நுவயிக்க வேண்டுமா, இரண்டும் இரண்டையுஞ்சார்ந்துவரும் என்று பொருள் கொள்ளவேண்டுமா என்ற ஐயம் உண்டாகலாம். இடையெனப்படுப...... (தொல்-சொல். 249) என்ற இச்சூத்திரமும், 'உரிச்சொற்கிளவி விரிக்குங் காலை...' (தொல்-சொல் 297) என்னுஞ் சூத்திரமும், 'இடைச்சொற் கிளவியும்...' (தொல்-சொல். 159) என்ற சூத்திரத்தின் பொருளை அநுவதித்து அவ்வையத்தைப் போக்குகின்றன என்று கூறின் நேரிதாம்.

அவைதாம்,
புணரிய னிலையிடைப் பொருணிலைக் குதநவும்
வினைசெயன் மருங்கிற் காலமொடு வருநவும்
வேற்றுமைப் பொருள்வயி னுருபா குநவு
250-வது மசைநிலைக் கிளவி யாகி வருநவு
சூத்திரம். மிசைநிறைக் கிளவி யாகி வருநவுந்
தத்தங் குறிப்பிற் பொருள்செய் குநவு
மொப்பில் வழியாற் பொருள்செய் குநவுமென்
றப்பண் பினவே நுவலுங் காலை.

வினைசெயன் மருங்கிற் காலமோடு வருநவும், என்பதற்கு உதாரணம் 'அன், ஆன்—அம், ஆம் என்னுந்தொடக்கத்தன' என்றார் உரையாசிரியர். "வினைச்சொல்லை முடிக்குமிடத்துக் காலப் பொருளவாய் வருவனவும்" என்றும், "வினைச்சொல் ஒருசொல்லாயி னும் முதனிலையும் இறுதிநிலையும் இடைச்சொல்லுமாகப் பிரித்துச் செய்கைசெய்து காட்டப்படுதலின் 'வினை செயன் மருங்கின்' என்றார். ........அவற்றுள் ஒருசாரன பாலுணர்த்தாமையானும், எல்லாங் கால முணர்த்துதலானும் 'காலமொடு வருநவும்' என்றார்." என்றும் கூறி னர் சேனாவரையர்.

முதனிலை நின்று காரியத்தினைத் தோற்றுவிக்கும் இடத்துக் காலங்காட்டும் இடைச்சொற்களோடே பாலும் இடமுங் காட்டும் இடைச் சொற்களாய் வருவனவும்' என்றும் 'உண்டான் என்புழி உண்ணென் னும் முதனிலை காலங்காட்டுகின்ற டகரத்தினையும், பாலும் இடமுங் காட்டும் ஆனினையும் விரித்துநின்றவாறு காண்க' என்றும் கூறினர் நச்சினார்க்கினியர்.

உரையாசிரியர் மதப்படி அன், ஆன், அள், ஆள், முதலிய வினை விகுதிகளே இடைச்சொல்லாகும். [1]சேனாவரையர் மதமும் அவ்வாறே யென்பது 'டதற வென்பன எதிர்காலத்திற்குரிய எழுத்தன்மைபால், பாலுணர்த்தும் இடைச்சொற்கு உறுப்பாய்வந்தனவெனவேபடும்' (தொல்-சொல். 202, உரை) என்ற வாக்கியத்தாலும், 'ஆகாரம் கால வெழுத்துப் பெறாது, உண்ணு, தின்னு எனவரும்' (தொல். சொல். 216 உரை) என்ற வாக்கியத்தாலும், 'அவற்றுள் ஒருசாரன பாலுணர்த்தாமை யானும், எல்லாங் காலமுணர்த்துதலானும்' [2]என்று இச்சூத்திரவுரை யிற் கூறப்பட்ட வாக்கியத்தாலும் விளங்குகின்றது. மேலும் முற் கூறிய வாக்கியங்களால் காலத்தைக்காட்டும் எழுத்து இடைச்சொற்கு உறுப்பேயொழிய இடைச்சொல்லாகாது என்பதும் பெறப்படும். ஆகவே, இச்சூத்திரவுரையிற் கண்ட 'வினைச்சொல் ஒருசொல்லாயினும், முதனிலையும் இறுதிநிலையும் இடைச்சொல்லுமாகப் பிரித்துச் செய்கை

1 இங்கு தொல். எழுத். குற்றியலுகரம். 76 சூத்திரத்திலகீழ் உரை யாசிரியர் கூறியுள்ளது நோக்கத்தக்கது.

2 முன்னிலை வியங்கோள் வினையெஞ்சு இலவி (தொல், சொல். 222)

செய்துகாட்டப்படுதலின்' என்ற வாக்கியத்தில் முதனிலையும் இறுதி நிலையும் இடைச்சொல்லுமாக என்றிருப்பது, 'முதனிலையும் இறுதி நிலையுமாக' என்றுவது 'முதனிலையும் இடைச்சொல்லுமாக என்றுவது இருத்தல்வேண்டும். 'வினைச்சொல் ஒருசொல்லாயினும் முத னிலையும் இறுதிநிலையுமாகப்பிரித்துச் செய்கைசெய்து காட்டப்படுத லின்' என்று சேனாவரையத்தில் இருந்திருப்பதை, இவ்வியல் இடைச் சொல்லைப்பற்றிக்கூறுவதால், இடைச்சொல்லும் என்று அங்கிருத்தல் வேண்டும் என்று மயங்கி ஏட்டில் முதனிலையும் இறுதிநிலையுமாக என்பதற்குப்பிரதியாக 'முதனிலையும் இறுதிநிலையும் இடைச் சொல்லுமாக' என்று எழுதியிருக்கவேண்டும் என்பதே என் துணிபு.

'அம்முடிபுணர்த்தாமைக்குக்காரணம்' 'புணரியனிலையிடை யுணரத் தோன்று' (தொல். எழுத். சூற்றியல் 76 என்புழிச் சொல்லப்பட்டது' என்று சேனாவரையர் கூறியுள்ளார். அங்கு அவரே சொல்லியுள்ளாரா? அல்லது 'மெய்யொருங்கியலும் என்றதனான் உண்டான் என்புழிச் செய்கையும், காலமும் பாலும் தோற்றிநிற்குமாறு பிரித்துப்புணர்க்கப் படாமை கொள்க' என்று உரையாசிரியர் கூறியதைக் குறிக்கின்றாரா? முன்னர்க்கூறியதாயின் சேனாவரையர் எழுத்ததிகாரத்துக்கும் உரை எழுதியிருந்தார் என்று பெறப்படும்.

உரையாசிரியரும் சேனாவரையரும் கூறிய பொருளே சூத்திரப் போக்குக்குப் பொருத்தமானது. சூத்திரத்தில் உள்ள 'வினைசெயன் மருங்கிற் காலமொடு வருநவும்' என்பதற்கு வினைச்சொல்லிற் காலத் தோடு வருவது இடைச்சொல் என்று பொருளாகும். காலத்தோடு வருவது என்பதற்குக் காலத்தைக்காட்டும் எழுத்து எனின், அன், ஆன் முதலியவைகள் இடைச்சொல்லாகா; காலத்தோடு என்ற சொல்லின் மூன்றும்வேற்றுமையுருபும் பொருந்தாது. அவ்வாறு ஆசிரியர் தொல் காப்பியனாருக்குக் கருத்தாயின் வினைசெயன்மருங்கிற் காலங்குறித்தன வும் என்று சூத்திரித்திருப்பர். ஆகையால் காலமொடு வருநவும் என்ப தற்கு முதனிலையல்லாத இறுதிநிலையே இடைச்சொல் என்று பொருள் படும். அப்போது காலவெழுத்து உரையாசிரியர்கூறியதுபோல இடைச் சொற்கு உறுப்பாயே நிகழும்.

இவ்வாறிருக்க, நச்சினார்க்கினியர் காலங்காட்டும் இடைச்சொற்களோடே பாலும் இடமுங் காட்டும் இடைச்சொற்களாய் வருவனவும் என்று பொருள்கூறினர். இதனால், அவரதுகாலத்துக்கு முன்னரே காலவெழுத்துக்களும் இடைச்சொல்லாக வழங்கப்பட்டன என்பது தெளிவாகின்றது.

## வேற்றுமைப்பொருள்வயி னுருபாதல்.

இதன் உரைகூறுமிடத்துச் சேனாவரையர் 'அனையையாகன் மாறே' (புறநா. 4) என்றவிடத்து மாறு மூன்றாம் வேற்றுமைக்கண் வந்ததென்று கூறியுள்ளார். புறநானூற்றுரையாசிரியர் 'அத்தன்மையை யாதலால்' என்று அதற்குப் பொருள் கூறியுள்ளனர். நச்சினார்க்கினியர் 'மாறென்னும் இடைச்சொல் வினையை அடுத்துக் காரணப்பொருள் உணர்த்திநிற்றலின் மூன்றாம்வேற்றுமைப்பொருள் உணர்த்திநின்றதல்லாமை உணர்க' என்று சேனாவரையரை மறுத்துள்ளார். மூன்றாம் வேற்றுமைப்பொருள் கூறுமிடத்து 'இன்னா னேது......' (தொல். சொல். 74) என்ற வாக்கியத்தால் காரணப்பொருளும் மூன்றாம்வேற்றுமைப் பொருளாமாதலால் நச்சினார்க்கினியர் மறுப்பு நிற்குமா வென்பது ஆராயத்தக்கது.

அவ்வாறே 'இயல்புளிக் கோலோச்சு மன்னவன்' (குறள். 545) என்னுமிடத்து உளி என்பது மூன்றாம்வேற்றுமைப்பொருளில் வந்தது என்று சேனாவரையர் கூறினர். பரிமேலழகரும் 'உளியென்பது மூன்றாவதன் பொருள்படுவதோரிடைச்சொல்' என்று கூறியுள்ளார். நச்சினார்க்கினியர் 'இயல்புளிக்கோலோச்சுமன்னவன்' என்புழி முறைமையிலே செங்கோல் நடாத்தும் என ஏழனுருபு விரிதலானும், உளியென்பது மூன்றனுருபின் பொருள்படவந்ததன்று' என்று மறுத்துள்ளார். இதுவும் ஆராயத்தக்கது.

சேனாவரையத்தில் 'சார்ந்த மொழியை வேறுபடுத்துநிற்றலின் அசைநிலைச்சொல்லாயின வென்பாரு முளர்' என்ற வாக்கியம் உளது. இங்கு வேறுபடுத்துநிற்றலின் என்பதன் பொருள் 'இடைச்சொல் லெல்லாம் வேற்றுமைச்சொல்லே'(தொல். சொல். 455) என்னுஞ் சூத்திர வுரையால் நன்கு விளங்கும்.

ஒப்பில்வழியாற் பொருள் செய்குந

'ஒக்கு மென்னுஞ் சொல்லன்றே ஒப்புமை யுணர்த்துவது; அச் சொல் ஆண்டின்மையான் ஒப்புமை தோன்றாமையான் ஒப்பில்வழியா லென்றார்' என்று சேனாவரையர் கூறினர். இதன் உட்கருத்தை நச்சி னார்க்கினியர் "நாடக வழக்கினான் உய்த்துணரினன்றி உலகியல் வழக் கினாற் காட்டப்படுவதோர் ஒப்பின்றி நின்ற ஒப்புமைப் பொருண்மை உணர்த்திவரும் உவமவுருபுகளும்" என்று விரித்துக்கூறியுள்ளார். 'ஒக்குமென்னுஞ் சொல்லை ஒப்பென்றாரென்பாருமுளர்' என்று பக்ஷாந் தரமும் கூறினர் சேனாவரையர்.

253-வது விழைவே கால மொழியிசைக் கிளவியென்
சூத்திரம். றம்மூன் றென்ப நிலைச் சொல்லே.

இச்சூத்திர வுரையினிறுதியில் இளம்பூரணத்தில் 'யாதானும் ஒரு சொல் ஒழிவுபடவரின் அஃது ஒழியிசை எனப்படும் என்றவாறு' என்ற வாக்கியம் உளது. 'கழிவே யாக்கம்...' (தொல். சொல். 252) என்ற முன் சூத்திரத்தினது உரையினிறுதியில் 'இனி இற்றென்று னும்......ஒருசொல்லை ஒழிவுபட வந்தமையின் ஒழியிசை என்பது' என்று உரையாசிரியர் கூறியிருத்தலால், 'யாதானும்...' என்ற வாக்கி யம் இளம்பூரணம் படித்தோரால் ஏட்டிற் சேர்க்கப்பட்டிருக்கவேண்டும்.

(தொடரும்.)

# கவியின்பம்.

[உசு-ம் தொகுதியின் ருடஉ-ம் பக்கத்தொடர்ச்சி].

இன்னும், இரகுவம்சத்தின்கண் அரசகேசரியாரியற்றிய மாலையீட்டுப்படலம், நைடதம் முதலிய நூல்களில்வரும் மாலையீட்டுப்படலங்களினும்பார்க்கச் சிறந்த புனைந்துரைகளையுடையதாய் விளங்கிக் கற்போர்க்குக் கழிபேரின்பந் தருதலின் அவற்றுள்ளுஞ் சிலகாட்டுதும்.

ஆகாயத்திலே செல்லும் சூரியனுடைய தேரொலி எதிர்காலத்தே இந்துமதி மாலையீட்டின்பொருட்டு வருமரசர்களுடைய தேர்கள்பலவற்றி னொலியுந் தன்னைக்கவர்ந்துவிடுமென்னு மச்சத்தினாலே ஆதியிலொலியாதொழிந்ததன்றி, வேறோரொலி தன்னைக் கவர்தலினாற் கேளாதொழிந்ததன்று என்னுங் கருத்தமையக் கூறிய,

"ஒருதனி யுருளினோங் கொலிமற் றோரொலி
பருகலிற் செவியிடைப் படாத தன்றிவண்
வருபுடை யரசர் தே ராவம் வல்வலைக்
கருதலி னாதியிற் கறங்க நீர்ந்ததே"

என்னுஞ் செய்யுள், சூரியனுடைய தேரினொலி ஒலியின்றியிருப்பதற்கு அரசர் தேரொலியைக் காரணமாகக் கற்பித்துக் கூறுதலினாலே, ஏதுத் தற்குறிப்பேற்ற மென்னு மலங்காரமும், அரசர்களின் தேரொலிக்குச் சிறப்புக்கூறுதலினால் உயர்வுநவிற்சி யென்னு மணியும், கேளாமைக்கு மற்றையவொலிகளைக் காரணமன்றென விலக்கலால் விலக்கென்னு மலங்காரமுந் தோன்ற நின்று மிகவு மின்பந்தருதல் காண்க.

இன்னும், அஜனுடைய தேரும் பொன்னிறத்தது. குதிரைகளும் பச்சைநிறத்தனவாயின. இங்ஙனமாகவும் உருளைகள்மாத்திரம் பலவாயின. பலவாகாது ஒன்றாயிருக்குமாயின் அஜனோடு சூரியனைப் பூமியிலுள்ளோர் வேறுபிரித்தறிவாரோ என்னுங் கருத்தமையக் கூறிய,

"செல்படா முகிறோய் தேருந் தேசிக மயத்த தெங்கு
மெல்படா விரிந்த பாரின் மாகத வெறிப்பாற் காலும்
வெல்படா மாவு நோக்கிற் பசியன விளங்கு மாழி
பல்படா திருந்த வாகிற் பகுப்பரோ வினனைப் பாரோர்."

என்னுஞ் செய்யுள், அஜனுக்கும் சூரியனுக்கும் தோரணங் குதிரையானுஞ் சமங்கூறி, உருளையான் வேற்றுமைகூறலால் ஒருபொருள் வேற்றுமைச்சமம் என்னு மலங்காரந் தோன்ற நின்று இன்பந்தருதல் காண்க.

இன்னும், மகளிருடைய மனப்போது மலருமாறு அஜனுடைய கண்கள் சிவந்த வெய்யிலொளியைத் தோற்றுவித்தாலும், அவனுடைய ஆபரணங்கள் அம் மனப்போதை இடைவிடாது உண்டுவிட்டன (குவியச் செய்தன). என்னும் பொருளமையக்கூறிய,

"மீனு ணுஞ்செவ் வெயிற்சோதி
பூனு ருண்க ணுமிழ்ந்தானு
மானர் தங்கண் மனப் போதை
ஆனு துண்ட தயற்பூணே."

என்னுஞ் செய்யுள், பெண்களுடைய மனப்போதிற்கு அஜனுடைய கண்களின் பிரகாசத்தால் விரிவையும் பூண்களாற் குவிவையும் கூறுதலினல் மிகவும் இன்பந்தருதல் காண்க. பெண்களுடையமனம் அஜனுடைய கண்களின் பிரகாசத்தால் மகிழ்ச்சியடைந்தாலும் அவனுடைய பூண்களின் பிரகாசத்தால் உடனே மயங்கிச் சோர்வடையு மென்பது கருத்து. அயற்பூண் விகாரம். கண்ணின்பக்கத்திற் பொருந்திய பூணென்பாரு முளர். பொருந்துமேற் கொள்க. இனி, ஊனுருங்கண் எனப் பாடங்கொண்டு உடம்பிலார்ந்த பூட்டுவா ளெனப் பொருள்கொள்வாரு முளர். முன்னையதினும் இதுவே சிறப்புடைத்துப்போலும்.

இன்னும், அஜன் அரையிற் கட்டிய வஸ்திரத்தின் உப்பக்கத்தே கிடக்கின்ற ஒள்ளிய வாள் மகளிருடைய உடம்பின்பக்கத்தே நிலைபெற்றுள்ள நாணினை, அப்பக்கத்தே (புறத்தே) நின்றும் அறுத்ததாயின் இனி அதன்வலியைக்குறித்துச் சொல்வதென்னை? என்னுங் கருத்தமையக் கூறிய,

"மெய்ப்பா னின்றுள மெய்ந்நாணை
அப்பா னின்று மறுத்துள்ள
திப்பா லென்சொல்வ தின்றாசி
ஐப்பால் வைகிய வொள்வாளே."

என்னுஞ் செய்யுளும் மிக இன்பந்தருகின்றது. இதன்கணாசிரியர் அகத்தே பொருந்திய நாணை யுடம்பின் புறத்தே நின்றும் வாள் அறுத்த தென அதன் சாமர்த்தியந் தோன்ற வைத்தமையும், வாளென்றதற் கேற்ப நாணென்றும் அறுத்துள்ளதென்றும், சொல்லலங்காரந்தோன்ற, 'அப்பால்' 'உப்பால்' 'இப்பால்' என்றும், பிரயோகித்தமையும் மிக வியக்கத்தக்கன வென்க. இப்பால் என்பதற்கு இவ்விடம் (அகம்) என்று பொருள்கொண்டு அகத்தே (நிற்குமாயின்) அது செய்யுமியல்பைச் சொல்வதென்னை? எனப் பொருள் கூறினும் பொருந்தும். இப் பொருட்கு நிற்குமாயின் என்பது இசையெச்சத்தாற் கொள்ளப்படும். இதில், அறுத்துள்ளது என்பது சமாதி.

இனி, அஜன் என்பான் மாலையீட்டுமண்டபத்தையடைந்த பொழுது, அங்கே இருந்த அரசர்கள்யாவரும் அவனைக்கண்டபொழுதே அவனழகில் ஈடுபட்டு மயங்கி, அவனழகை வியக்குமாற்றைப் புனைந் துரைக்குமாறும் மிகவுஞ் சுவைபயத்தலின் அதனையு மிங்கே எடுத்துக் காட்டுதும், அஃதாவது,—

"இந்துமதி மாலையிடுநோக்கிச் சென்ற அஜன் என்பான், விதர்ப்ப நாட்டாசனாகிய போசராசனால் மாலையீட்டின்பொருட்டு அமைக்கப்பட்ட மண்டபத்தை யடைந்தான். அங்கே தம்மைத்தாமே மதித்து இறுமாப்புடன் குழுமியிருந்த அரசர்கள் யாவரும் அவனைக்கண்டார்கள். கண்டு அவனழகில் ஈடுபட்டவர்களாய் மயங்கி, என்னே? இவன் ஒரு இயக்கனோ! அல்லது பிரமனெழுதிப்படைத்த ஒரு தேவபுருடனோ! என அதிசயமுற்று, அவ்வளவினுந் தெளிவுபிறவாது பின்னுஞ் சிந்தித் தார்கள். எங்ஙனமெனின்? மூவுலகங்களையும் வெல்லும்படி காமனே இங்குத் தோன்றினான். அவன் எம்முடைய கண்களுக்கெல்லாம் புலப் படத்தோன்றினமையானே அரனார் முன்னைநாளில் (மன்மதனை யெரித் துப் பின்னெழுப்பியநாளில்) இரதிக்குமாத்திரம் ரூபியாயிருக்குதி எனக் கூறியவாக்கும்பொய்த்தது. காமனன்றியும், எம்மையெல்லாம் வஞ்சிக்கு மாறு வீணையுங் கரத்துவைத்துவந்த ஒரு விஞ்சையனாகவும் காணப்படு கின்றான். ஏனெனின்? ஆடவர் பெண்மையை அவாவும் அழகனாய் மகளி ருள்ளத்தன்றி, எம்முள்ளத்தும் நிறைந்தான் ஆதலால் என்பது. இங்கே ஆசிரியர் அரசர்கள்வாயிலாக அஜன் அழகைப் புனைந்துரைத் தது எத்துணை இன்பமளிக்கின்றது.

மேலும், அரசர்கள் யாவரும் இயக்கனே!. திவ்வியபுருடனே! காமனே! விஞ்சையனே! என இவ்வாறு பலபடச்சிந்தித்தமனத்தை ஒருவழிப்படுத்தினவர்களாய்த் தேவகாந்தி, அழகு, வசியம் என்னு மிவைகளன்றி வீரமுங் காணப்படலான், அஜன் தமக்கு முருகனைப்போலக் காணப்பட்டார்கள். (எனவே முருகனைக் கண்டார்கள்.) அவர்களுக்கு முருகனைப்போலக் காணப்பட்ட அஜனும், அவ்வரசர்களையெல்லாம் தேவர்களைப்போலப் பார்த்துப் பரிய ஒரு இரத்தினசனத்தை அடைந்து வீற்றிருந்தான். என்னுங் கருத்தமையக்கூறிய,

ஈருழிப் போகி யிவ்வா றெண்ணிய மனத்தை மன்ன
ரோருழிப் படுத்திச் செவ்வே ளொருவனிற் காணப் பட்டார்
சீருழிச் சிறந்த தானு மவர்தமைத் தேவர் தம்மிற்
பாருழித் தெரிந்து நோக்கிப் பருமணிப் பீடஞ் சார்ந்தன்"

என்னுஞ் செய்யுளும் மிக இன்பந்தருதல் காண்க. முருகன் தேவசேனாதிபதியாகலின் அதற்கேற்பத் தேவர்தம்மிற் பாருழித்தெரிந்து நோக்கி யெனக் கூறியதும் மிக வியக்கத்தக்கதேயாம். இன்னும், அரசரைத் தேவர்தம்மிற்கண்டா னெனவே அச்சபாமண்டபத்தையும் அமராவதிபோலக் கண்டானென்பதும் பெற்றாம்.

இங்ஙனமே, அஜனைச் செவ்வேளொருவனிற் காணப்பட்டாரென்பதற் கேற்ப, அவன் சென்றிருந்த பீடத்தையும் மயிலாக உவமித்து,

"மாசிலா வருணவெண் படாத்த மாமணி
யாசன மீமிசை யிருந்த வாரியன்
தேசுடை மயிலின்மேற் றெரிந்து தோன்றிய
ஈசனிற் பொலிந்தன னெவரு மெண்ணவே"

எனக் கூறியதும் மிக இன்பந்தருதல் காண்க. நீலம், மஞ்சள் முதலிய நிறத்தையே விசேடமாகக்கொண்ட கம்பளமிட்டதும், இரத்தினங்கள் பதித்ததுமாயுள்ள ஆசனம் விசித்திரரூபத்தால் மயில்போன்றிருந்ததென்க. சிலாவருணம் - இந்திரவில்லின் நிறம்; சிலா - சிலை - வில்.

இன்னும், இந்துமதியின்கண்களைச் சூழ மையெழுதினமை, பாற்கடலிற் றோன்றியநஞ்சு, திருமால், தன்னைக் காபாலிகையிற் கொடுத்த பழம்பகையை நினைந்து, இனித் திருமால் எங்கேபோகப் போகின்றான்

என்று அவர் போகாதபடி அவரை யகப்படுத்துமாறு அவர்துயிலும் அக்கடலைச் சூழ வளைந்ததுபோன்றிருந்ததெனத் தற்குறிப்பேற்றமாகக் கூறிய,

"தாவார் துணைக்கட் கிருளாலங் தடம்பாற் சலதி தனியேநின்
ருவா வென்றங் ககடுடைய வாற்று நிற்ப வன்றெம்மைக்
காவா னுகிக் காபாலி கையிற் கொடுத்தோன் கடல்விட்டுப்
போவானினியெங்கெனவளைத்தாற்போலஞ்சனமும்பொறித்திட்டார்.

என்னுஞ் செய்யுளும் நோக்குவார்க் கெத்துணையின்ப மளிக்கின்றது. கருவிழிக்குத் திருமாலும், வெள்ளைவிழிக்குப் பாற்கடலும், மைக்கு நஞ்சு முவமை யென்க. இச்செய்யுளுள், "தடம்பாற்சலதி தனியேநின்—ருவாவென்றங்ககடுடைய வாற்றுநிற்ப" என்னும் பகுதி, "நென்னற் கண்ட திருமேனி" என்னும் இராமாவதாரச் செய்யுளுள் வரும் "தனியே கதறுந் தடங்கடல்வாய்" என்னும் பகுதியை ஒத்திருப்பது ஈண்டு நோக்கத்தக்கது.

இனி, இந்துமதி மாலையிட்டுமெண்டபத்தை யடைந்தபோது, அவளைநோக்கிய அரசர்களும் அஜனும் அடைந்த காதனிலையைப் புனைந்துகூறியதூஉம் மிக இன்பமளிப்பதேயாம். ஆதலின், அதனையும் (கத்தியரூபமாக) ஈண்டுக் காட்டுதும். அஃதாவது:—

இந்துமதி மாலையீட்டுமெண்டபத்தினுள்ளே புகுந்தபொழுது அங்கேயிருந்த அரசர்கள் யாவரும் அவளைக் கண்டார்கள். கண்ட அவர்கள், தம்முடைய அந்தக்கரணங்களெல்லாம் ஒரு கனியைக் கண்ட பறவைகள்போல அவண்மேற் சென்றுவீழத் தாம் தத்தம் ஆசனங்களில் வெற்றுடம்பினர்களாய் இருந்தார்கள். இங்கே, இந்துமதிமேல் வந்துவீழ்ந்த அந்தக்கரணங்களுள் ஏனையவெல்லாஞ் சிந்தையிடத்ததாக அச்சிந்தையெல்லாம் அவளது அழகென்னும் மதுவைப் பருகி அவள் மலரடிப்புறத்தே வைகின. அவை யவ்வாறு வைகிக்கிடக்க, அவர்களுக்கு இடையே இளையதொ ராசவாவையொத்திருந்த அஜனும், இளங் கொம்புபோன்ற இந்துமதியைக் கண்டான். கண்டபொழுதே அவனுடைய சிந்தையானது அவன்கட்பார்வையாகிய தேரிலேறி இளமையாகிய பாகன் செலுத்த, அவளுடைய அழகாகிய கோயிலிற்போய்

வீற்றிருந்தது. அங்ஙனம் வீற்றிருந்த சிந்தையானது ஒருநிலைப்படாது, அவள் முகத்தாமரையில் ஒருகாற் சென்றிருக்கும். பின் அதனைவிட்டுச் செவ்விதாக நடந்துபோய் நுதலாகிய திங்கட்பிஞ்சிலும் ஒருகால் வதியும் அதனைவிட்டுச்சென்று கூந்தலாகிய மாக்காவிலும் ஒருகால் உலாவித் திரும்பும். ஒருகாற் பொருகின்ற இரட்டைக்கயல்களையும் எதிரப் பார்த்துச் சுழலும். ஒருகாற் பூட்டாது தானே வளைந்த வில்லின் மாட்டும் போய்த் தங்கும். ஒருகால்,இலவமலரின்க ணூறுங் தேனைப் பருகக் கருவும். ஒருகால் இருகுழையிலும் போயிருந்து அவற்றோ டுசேலாடிக்கொண்டிருக்கும். இன்னணம் அஜனுடைய மனம் இந்துமதி யின் ஒன்றொன்றிற் குறைவின்றியிருக்கும் அவயவங்கடோறுஞ் சென்று அவற்றினழகை நோக்கிக்கொண்டு அங்கங்கே சுழன்றுதிரிய, மூன் அந்தக்கரணங்களால் வீழ்ந்து, அவளடிமலர்ப்புறத்துவைகிய அரசர்கள் எழுந் தொருவாறு சென்று தம்முடம்பைப் பொருந்தி யிருந்துகொண்டு இந்துமதிக்குத் தத்தங் காதலை யறிவிப்பாராய்ச் சில சிருங்காரசேட்டை களைச் செய்துகொண்டிருந்தார்கள் என்பது.

இனி, அரசர்செய்த சிருங்காரசேட்டைகளையும் படிப்போரின்புறு மாறு தருதும்.

ஓரரசன், அழகைக் காணும்படி அவளது முகத்தாமரையில் வீழ்ந்த மனம் புழுங்கிச் சுழலத் தன்கைத்தாமரைமலரை அம்மலர்க்கணுள்ள பூந்தாது தன் ஒளியால் மேலே ஓர்வட்டத்தைச்செய்யவும், அதன்மேற் றூதுண்ணும்படிவந்த வண்டுகள் ஓர்வட்டத்தைச்செய்யவுஞ் சுழற்றிக் கொண்டிருந்தான். (உன்னால் யானு மிப்படிச் சுழற்றப்படுகின்றேன் என்பதைக் குறிப்பித்தற்பொருட்டுப் பூவைச் சுழற்றினன் என்பர் முதனூலுரையாசிரியர்).

ஓரரசன் எனக்கு மணமாலையைப் புனைவீ ரென்பதைக் குறிப்பிப் பான் போலத் தன்னிலையைவிட்டு விலகியதாகக்கொண்டு வலப்புயத்தி லுள்ள பூமாலையைத் திருத்தினன். இம்மாலையைப்போல உன்னையுந் தழுவிக்கொள்வேன் எனக் குறிப்பித்தற்பொருட்டு மாலையைத் திருத் தினனென்பர் முதனூலுரையாசிரியர்

ஓரரசன், மதியே! உனக் கடிமைபுக்கேன்; என்னை யடிமைச் சாதனஞ்செய்துகொள்ளுதி யென உணர்த்துவான்போலக், கீழ்நோக்கித்

காலிலுள்ள விரல்களை வளைத்துப் பீடத்தின்மேல் எழுதிக்கொண்டிருந்தான். (நீ எனக்குச் சமீபத்தில் வா வெனக் குறிப்பித்தற்கு அங்ஙனஞ் செய்தானென்பர் மூதனூலுரையாசிரியர்).

ஓரரசன், இந்துமதியின் அழகோடு தன்னழகும் எதிர்த்த போரிலே தன்னழகு தோற்றதினால் மனங்கனன்று விரைவிற் புறங்கொடுப்பவனைப் போல ஆசனத்தி லோர்கையை யூன்றிக்கொண்டு திரும்பித் தன் பாங்கனைப் பார்த்தான். (பாங்கனைப்போல உன்னையும் பக்கத்து வைத்துக்கொள்ளுவேன் என்பதைக் குறிப்பித்தற்காகப் பாங்கனைப் பார்த்தான் என்பர் மூதனூலுரையாசிரியர்).

ஓரரசன், மன்மதன் என்பாற் கணைகளைப் பரப்பினான். வாளாகிய இதுவொன்றேயன்றி வேறுபடை இல்லை என்பான்போலப் பக்கத்துள்ள ஒருபெண்ணின் காதிலுள்ள தாழம்பூமடலை எடுத்துப் பலவாகக்கிழித்தான் (இவ்வாறு குறிசெய்வேன் என்னுங்கருத்தனாய் நகத்தாற் கிழித்தானென்பர் மூதனூலுரையாசிரியர்).

ஓரரசன், இந்துமதிக்குத் தன்னுயிரை ஒட்டமாகவைத்து, மன்மதனை வென்றிக்குச் சான்றாக நிறுவி, அவளைக் கவறெறிந்து விளையாட வரும்படி குறிப்பவனைப்போலத் தன்னாசனத்திற் கவறெறிந்திருந்தான்.

ஓரரசன், தன்முடி அவ் விந்துமதியின் மார்பின்கட்புகுந்ததோ! அல்லது தன்றலையிற்றானிருக்கின்றதோ! என்று மறதியாற் றடவிப் பார்ப்பவனைப்போலத் தன்முடியைத் திருத்திக்கொண்டிருந்தான். (உன்னை இத்தலையில்வைத்துக்கொள்வேன் என்பதைக் குறிப்பிப்பானாய் முடியைத் திருத்தினான் என்பர் மூதனூலுரையாசிரியர்) என்பனவே.

இனி, இங்ஙனம் அரசர்கள் காமபரவசராய்ச் சிருங்காரசேட்டைகளைச் செய்துகொண்டிருக்கும்போது, தோழியாகிய சுநந்தையென்பாள் அவ்வரசர்களைக்காட்டி, இவன் இன்னான்; இவன் இன்னான் எனக் கூறுவதையும், கூறும்பொழுது இந்துமதி ஒவ்வொருவரையும் பார்த்துத் தன்மனம் அவர்கட் செல்லாமையினாலே, ஒவ்வொருவரையும் விட்டுச் செல்வதையும் ஆசிரியர் புனைந்துரைத்தது மிகவு மின்பந்தருதலின் அவற்றையும் ஈண்டுக் காட்டுதும்:—

தோழியாகிய சுநந்தை இந்துமதியை நோக்கி, அரசகுமாரியே! இவனைக் காண். இவன் பரந்தபன் என்னும் பெயருடைய மகததேயத் தரசன். இந்திரன் வானைவிட்டுப் பூமியிலேயே நிற்குமாறு நித்தியமும் யாகஞ்செய்பவன். இவனுக்கு மேற்பட்ட அரசன் இந்திரன். கீழ்ப் பட்டவர்கள் பூலோகவாசர்கள் என்று அவன்மேன்மைகளை எடுத்துக் கூறினாள். அப்போது இந்துமதியின் விழியாகிய வண்டுகள், அவன் முகத்தாமரையிற் செல்லவிரும்பாது மீடலால், தோழி அவனைவிட்டு அவனுக்கருகே யிருக்கும் மற்றோரரசன்பால் மானசவாவியின்கண் அதில் எழுந் திரை தள்ள ஒரு தாமரைப்பூவை விட்டு மற்றொரு தாமரைப் பூவிற்கு ஓர் அன்னஞ்செல்லுதல்போலச் செல்லுமாறு அவளைக் கொண்டுபோனாள் என்னும் பொருளமையக்கூறிய,

"சிறுகொடி விழிவன் டன்னு னம்புயஞ் செலாது மீள
வுறுமடு மான சத்தி னெண்டிரை யுந்தா நிற்ப
நறுமலர் நளின மாடே நின்றொரு நளின மாடே
குறுகனப் பெடையின் மற்றோ ரரசன்பாற் கொண்டுபோனாள்"

என்னுஞ் செய்யுளுள், இந்துமதியின்விழியை வண்டாகவுருவகித்ததற் கேற்ப, அவ்வரசன்முகத்தைத் தாமரைமலராக வுருவகித்தும், தோழிக் குத்திரையையும், அவள்கொண்டுபோதற்குத் திரையுந்துதலையும், அரசர் களுக்குத் தாமரைப்பூக்களையும், இந்துமதிக்கு அன்னப்பெடையையும், இந்துமதியின்செல்லுகைக்கு அன்னத்தின் செல்லுகையையும் உவமை புணர்த்தியதூஉம், முதலடியில் உருவகவுணியும் பின்னடிகளில் உவமை யணியும் அமையவைத்ததூஉம் நோக்க நோக்க எத்துணையின்ப மளிக் கின்றன. குறுகனப்பெடையின் என்றாரேனும் அனப்பெடைசெல்லு தல்போல என்பது கருத்தாக, உவமைக்கேற்பக்கொள்க. இதனைப் பின் வருவனவற்றிற்குங் கொள்க.

இன்னும், தோழி, இந்துமதியே! இவன் அங்கதேசத்தரசன். இவன் அரம்பையர்களுடைய எண்ணங்களையெல்லாம் தன்கட் பிடித்து இணக்கிய அழகையுடையவன். ஓர் சாபத்தாற் பூமியிலடைந்த திக்கு யானைகளையெல்லாம் பாலகாப்பியம் என்னும் நூலினாலே வசப்படுத்திய வன் என்று அவன் மேன்மைகளை எடுத்துக்கூறினாள். அப்போது இந்துமதியின்கண்ணாகிய மான் பாய்ந்து, அவன் எழிலாகிய கண்ணி

யுட்படாது தூரநிற்பத், தோழி யவ்வரசனை விட்டு மற்றோரரசன்பால், திங்கள் ஒருவீதியைவிட்டு மற்றொருவீதிக்குச் செல்வதுபோலச் செல்லுமாறு அவளைக் கொண்டு போனாள் என்னும் பொருளமையக் கூறிய,

"மாந்தளிர் மேனி நல்லாள் வரிவிழி மான்போய் வல்லே
பாய்ந்தவன் கண்ணி தன்னுட் படாதுற நிற்பத் திங்கள்
காந்தொரு வீதி தன்னைக் கடந்தொரு வீதி தன்னிற்
போந்தென மற்றோர் செம்ம றன்னயல் கொண்டு போனாள்."

என்னுங் கவியுள், அவள்விழியை மானாகவுருவகித்ததற்கேற்ப, அவ்வரசனெழிலை வலையாக வுருவகித்ததும், இந்துமதிக்குத் திங்களையும் அரசர்களுக்கு வீதிகளையும், இந்துமதியின் செல்லுகைக்குத் திங்களுடைய செல்லுகையையும் உவமைபுணர்த்தியதும் மிகவுஞ் சுவைதருதல் காண்க. திங்களுக்குரிய வீதி, மேடமுதலியவீதி. கண்ணியென்பதற்கு மாலையென்றும் வலையென்றும் சிலேடையாகப் பொருள் கொள்வாருமுளர்.

இன்னும் தோழி இந்துமதியே! இவன், அவந்திதேசத்தரசன் இவன், பூர்வபக்கத்திலன்றி, அபரபக்கத்திலும் மாலைக்காலத்திலே மாகாளேச்சுரர து சடையிலிருக்கும் இளம்பிறையைத் தொழுது வாழ்பவன் (என்றது நித்தியமும் தவறாது மாகாளேச்சுரரைத் தரிசிப்பவன் என்றபடி) மயனாற்கடையப்பட்ட சூரியன்போன்ற பிரகாசமுள்ளவன் என்று அவன் மேன்மைகளை எடுத்துக் கூறினாள். அப்போது, இந்துமதியின் கண்ணாகிய கயல் அவ்வரசனுடைய மார்பாகிய தடத்திலுட் பாயாது நீப்பத் தோழி அவ்வரசனைவிட்டு மற்றோரரசன்பால், இமயமலைச்சாரலினின்று மேருமலைச்சாரலைநோக்கி ஓர் இளம்பிடி செல்லுதல்போலச் செல்லும்படி, அவளைக் கொண்டுபோனாள் என்னும் பொருளமையக்கூறிய,

"மைதிகழ் கோதை நாட்டக் கருங்கயன் மருண்டு போயக்
கெய்திகழ் வேலான் மார்ப நெடுந்தடத் தூறாது நீப்ப
மெய்திக ழிமையச் சார லின்றொரு மேருச் சார
லெய்திளம் பிடியின் மற்றோ ரேந்தல்பாற் கொண்டு போனாள்"

என்னுஞ்செய்யுளுள், இந்துமதிகண்ணைக் கயலாகவுருவகித்ததற்கேற்ப, அவ்வரசன்மார்பைத் தடமாகவுருவகித்ததூஉம், அவளுக்கு இளம்பிடியையும், அரசர்களுக்கு மலைகளையும், அவள் செல்லுகைக்கு அப்பிடியின் செல்லுகையையும் உவமைபுணர்த்தியதூஉங் கழிபேரின்பந் தருதல் காண்க. வாளா மலையென்னாது அரசர்களின் சிறப்புத்தோன்ற இமயம் என்றும் மேரு என்றும் விதந்துகூறியதூஉம் வியக்கத்தக்க தென்க.

இன்னும், தோழி, இந்துமதியைநோக்கி, இவன் பிரதீபன் என்னுமரசன். இவன், குலமுறையாக அரசர்களைக் கொன்ற பரசுராமனுடைய பரசுநுதியைப் பானற்றோடுபோல எண்ணிப் பழிக்கின்றவன் கார்த்தவீரியனுடைய குலத்திற் பிறந்தவன் என்று அவன் மேன்மையை எடுத்துக்கூறினாள். அப்போது, இந்துமதியின் கண்ணாகிய சகோரம் அவ்வரசனுடைய முகமாகிய மதியின் நிலவை யுண்ணாதொழியத் தோழி அவ்வரசனை விட்டு மற்றோரரசன்பால்) கற்பகவிருக்கத் தயனின்று மந்தார விருக்கத்தயலே ஒரு தெய்வமென்கிளி போவதுபோலப் போகுமாறு, அவளைக் கொண்டுபோனாள் என்னும் பொருளமையக் கூறிய,

"மெய்வளை விழிச்சகோர மாங்கவன் முகவெண் டிங்கட்
கைவளர் நிலவை யுண்ணா தொழிந்திடக் கற்ப கத்தின்
மெய்வள ரயலே நின்றோர் மந்தாரத் தயல்போய் மேவும்
தெய்வமென் கிளியின் மற்றோர் செம்மல்பாற் கொண்டு போனாள்"

என்னுஞ் செய்யுளுள், இந்துமதியின்விழியைச் சகோரமாக வுருவகித்ததற்கேற்ப அவ்வரசன்முகத்தை மதியாக உருவகித்ததூஉம் அவளுக்குத் தெய்வமென்கிளியையும் அரசர்களுக்கு (உயர்ச்சிதோன்றக்) கற்பகமும் மந்தாரமுமாகிய தருக்களையும் அவள் செல்லுகைக்கு அக்கிளியின் செலவையும் உவமைகூறியதூஉம் மிகவும் சுவையளித்தல் காண்க.

இங்ஙனமே சுவைதருஞ்செய்யுள்கள் சில பின்னும் வருகின்றன. அவற்றையும் நோக்கியுணர்ந்துகொள்க.

இங்ஙனம்,

சி. கணேசையர்.

# குருபரம்பரை.

## எம்பெருமானார்வைபவம்.

—(0)—

[௫௮-ம் பக்கத் தொடர்ச்சி.]

அத்தலத்துள்ளசமயவாதியரையருமறைவிதியினால்வென்றே
யுத்தமகுணத்தான்றுவாரகைக்கேகியூபத்தையுவப்புடனோக்கிப்
பத்தர்கடுதிப்பப்பட்டிமண்டபத்தின்மன்னியப்பட்டிமண்டபத்தில்
எத்தலத்தவருமிறைஞ்சவீற்றிருக்குமிலங்குவெண்டாமரையாட்டி. (௭௦௮)

தன்னருகணைந்தாரெதிகணாயகனார்சரச்சோதிகண்டடிவணங்கி [ஞ்சி
யென்னுடையுடைமையனைத்தையுங்கைக்கொண்டிடுகநீயிறைவனென்றிறை
முன்னுறத்திறந்துகொடுத்தனள்கொடுப்பமுத்தனுமத்திறநோக்கி
யன்னமென்னடையாய்நமக்குநீயிதுசெய்திடுவதற்கடியென்கொலென்றான்.

என்றலும்வாக்குநங்கையுமென்பாலெய்தினன்சங்கராசிரிய
னன்றிசேர்குணத்தாய்முன்புநானவனைநவிலுமோர்சுருதிவாக்கியத்துக்
கின்றுநீயத்தமருள்கவீங்கிதற்கென்றியம்பினேனெத்தனைகற்றும்
அன்றதற்கத்தம்வானராதனமேபோன்றகண்ணுடையனென்றறைந்தான்.

செப்பருங்குணத்தாயருமறைமுடிவைத்தெரிந்துசிபாடியஞ்செய்தாய்
அப்பொழுதந்தவாக்கியந்தனக்குமாசறுபுண்டரீகம்போன்
றொப்பிலாநயனமுடையவனென்றாங்குள்ளவாறுணர்ந்துநின்னறிவிற்
றப்பறவுரைத்தாயத்திறங்கண்டுன்றுதிநானுயினேனென்றாள். (௭௧௧)

என்றவளுரைப்பவெதிகணாயகனுமிராகவன்கவுசிகன்புகழ
நின்றனனென்னநின்றனன்றன்னைநெஞ்சினிலிறைவியப்பின்றி
யன்றுபோய்மற்றோர்தினத்தினிற்புலவரடிதொழவாக்கிதன்னிடத்திற்
சென்றவள்கையிற்சிபாடியந்தன்னைவைத்தனன்யாவருந்தெளிய. (௭௧௨)

வைத்தவரணங்கேயந்நூலிற்றலைவயகமெடுப்பதற்குரித்தேற்
கைத்தலத்திதனைவைத்திருநாளைக்காலமேவருகின்றேனலதேன்
மெய்த்தவமுடையாய்கிழிடென்றியம்பிவேதியர்முறைமுறைதுதிப்பப்
பொய்த்தவங்கடிந்தார்மீண்டுபோய்மடத்திற்புலவர்கள்புகழவீற்றிருந்தார். ()

அத்தலத்துறையுஞ்சமயவாதியர்களனைவருமொன்றுறக்கூடி
யுத்தமப்பனுவல்வாக்கிதன்கரத்திலுடையவர்வைத்தகன்றிட்டார்
சித்தமுமகிழ்ந்தப்பனுவலைவாக்கிசிரத்தினிற்றரிப்பதுந்திண்ணம்
இத்தலத்திருந்தோம்யாவருமிதன்றெற்கிட்டவர்பட்டதேபடுவோம். (௭௧௪)

ஆதலாலிவரைவெல்வதற்குபாயமர்ச்சகன்றன்னைவிட்டந்த
வேதசாரத்தையிற்றைநாளிரவில்விரைவினிலெடுத்ததைவாங்கிப்
பூதமோரைந்திலக்கினிக்கிரையாய்ப்போக்குதறகுதியென்றவரின்
மூதறிவுடையோருணர்ந்துரைத்திட்டாரனைவருமொழிநலனென்றார். ()

அற்றைநாட்கங்குற்பொழுதினிற்சிலரவ்வர்ச்சகன்மனையினிலேகி
யிற்றைநாள்வாக்குநங்கைதன்கரத்தில்யாவருந்தொழுதெழவனைத்துங்
கற்றவன்வைத்தநூலினையின்னேகதுமெனக்கொணர்ந்தளித்திட்டால்
மற்றொருவர்க்குமுரைக்கிலேநினக்குமலையெனப்பெருநிதியளிப்போம். ()

என்றனரென்றபொழுதினிலவனுமெழுந்திருந்தர்த்தராத்திரியிற்
சென்றனன்வாக்கிகோயிலுளவளுந்திருக்கையிலிருந்ததைச்சிரத்தி
லன்றுறத்தரித்தாளிருகணுற்பெருகுமாநந்தவாரிதியொழுக
நின்றனணின்றாணிலைமையைநோக்கிநெடிது*போதஞ்சிநின்றவனும். (எகஎ)

ஆருயிரெய்துநரகினையறியானற்பசாரஞ்சுவைப்பதற்காய்ச்
சீரிலான்வாக்குநங்கைதன்சிரத்திலிருந்தசீகோசத்தையெடுத்துப்
பார்மிசைநடந்துதன்னகம்புகுந்தான்பரிந்தவன்வரவுபார்த்திருந்தார்
தாருமென்றதனைக்கதுமெனவாங்கித்தடையறக்கனலிடையிட்டார். (எகஅ)

கனலிடையிடவுமக்கினிக்கடவுள்கண்டகர்செய்கையைநினைந்து
மனமிகநடுங்கிவாங்கினன்வாக்கிமற்றவனருகணைந்ததனை
வினவரும்புகழாய்தருதியென்றேற்றாள்விரிஞ்சனார்தேவியென்றஞ்சி
யனலவன்கொடுத்துவணங்கிநின்றன்னேயறைதியிக்காரணமென்றான். ()

நன்றெனவாக்குநங்கையுமதனைநனைமலர்க்கூந்தலுளமைத்து
நின்றெரிவேந்தேகேளிந்தவுலகினெடுந்துயர்தீர்ப்பதன்பொருட்டால்
அன்றிராகவன்பினிலக்குவனாகவவதரித்திட்டசீமானார்
இன்றுநானிலத்தோருய்வதன்பொருட்டாலவதரித்திந்தநூல்செய்தார். ()

இந்தநூல்வேதநான்கையும்வடித்தாங்கெடுத்தநற்சாரமாதலினால்
அந்தமில்புகழாயிவனுடனெதிர்ந்தாரனைவருந்தோற்றனர்விரைவில்
வந்தனனிந்தமண்டலத்தவரைவாதிடைவெல்லவென்றெண்ணிச்
சிந்தையின்மகிழ்ந்தானென்கரத்திந்தச்சீரியநூலைவைத்தகன்றான். (எஉக)

எண்ணரும்புகழாய்தெய்வநூலெனக்கொண்டென்னுடைச்சிரத்தினி லமைத்தவ், குண்ணிறைபொருளிற்சிந்தைபோயென்னைமறந்தறவொடுங்கி நின்றனனான், பண்ணமர்பனுவறன்னையென்னற்றநோக்கியிப்பாதகரெடுத் துன், கண்ணமைத்திட்டாரீதுமுன்னிகழ்ந்தகாரணமென்றுகட்டுரைத்தாள்.

*போயஞ்சி, பி-ம்.

வாக்கியுந்தன்சீர்க்கோயிலுளமர்ந்தாண்மற்றைநாட்காலமேயெழுந்து,
பாக்கியந்திரண்டபான்மையானெதிகடலைவனும்பத்தரைக்கூவி, நோக்கினா
னென்னற்கொடுத்தசீகோசநோன்பின்மிக்கவணினைவோடு,மாக்கியதலத்திற்
சென்றதைவிரைவிற்கொணர்மினென்றன்பர்கட்கறைந்தான். (௭௨௩)

**வேறு.**

அப்படியேயன்பர்கள்சென்றயனுவில்வீற்றிருக்கும்
ஒப்பரியாள்கரத்திலென்னலோங்கியசீரெதிராசன்
செப்பமிகுஞ்சீகோசஞ்செறிவித்தானுங்கதனைத்
தப்பிலாய்தருதியெனவாங்கவனுந்தடுமாறி. (௭௨௪)

**வேறு.**

பொய்யரிற்பெர்ய்யன்போதமிக்கவரேபோயினதினத்திதைத்தேவி
கைம்மிசையிருப்பக்கண்டனனின்றுகதிரவனெழுமுனம்புகுந்திம்
மையமர்கண்ணுடிருவடிவிளக்கமன்னினேனந்தநூறன்னை
மெய்யமர்வாணியெங்கொளித்தனளோவெறுங்கையோடிருந்தனளென்றான்.

என்றவன்பகரத்தொண்டருங்கலங்கியெழிறிசழ்கோயிலுட்பலராய்ச்
சென்றனர்ரெங்குநாடினர்காணர்திகைத்தனர்திகைத்தலமர்ந்து
நின்றனரெதிகடலைவனுக்கிந்தநீர்மையையுரைத்திடமீண்டா
ரன்றவர்திரும்பிவருநெறிதன்னிலந்தணர்சிலரவணிருந்தே. (௭௨௬)

நென்னலோர்கோசமுடையவர்கொணர்ந்துநெறியுடைவாக்கிதன்கரத்தில்
மன்னவைத்தகன்றாராங்கதையிவ்வூர்மறுசமயத்தவரெடுத்திட்
டின்னதென்றெண்ணாரெரியிடைமடுத்தாரென்றுபேச்சுரெலாமிதுதான்
நன்னலமுடையீர்மெய்கொலோபொய்யோநவில்கவென்றிவரொடுங்கேட்டார்.

ஒக்குமென்றவருமாருயிர்வாடியுடையவர்க்கத்திறமுரைத்தார்,
மூக்குணங்கடிந்தவெதிகணாயகனுமுடிவிலாத்துயர்க்கடற்படிந்தான்
பக்கநின்றாழ்வான்பரமதேசிகனேபாடமற்றெனக்கவையனைத்தும்
தக்கசீகோசநாலுநாளகத்துத்தருகின்றேனென்றுறச்சாற்ற. (௭௨௮)

உடையவரெழுந்துசிந்தனைகளித்தீதுரைத்தவாழ்வான்றனைநோக்கித்
தடையறப்புல்லியென்னுயிரனையாய்சார்வுமற்றுன்னையேயுடையேற்
கிடையிலோர்துன்பம்வருங்கொலோவென்னவியம்பினனியம்பியபின்பு
புடையிருந்தவரைநோக்கியென்னூலைப்பூமகணாவினிலுறைவாள். (௭௨௯)

கொடுத்திடாளெவர்க்குமின்னுநீரேகிக்கோதறும்வாக்குடையாளை
யடுத்துநின்றணங்கினருச்சகன்றனைக்கொண்டாங்கவளோங்குபூங்குழலை
விடுத்துறவிரித்துநோக்குவித்திடுமின்மெல்லியல்சிரத்தினிலிருக்கும்
படுத்தபாம்பணையான்பாத்துவமெனுஞ்சொல்பனுவலுக்கினியவளறியும். ()

என்றுரைத்தருளவிரைவினிலேகியெம்பிரான்றொண்டர்கள்வாக்கி
மன்றல்சேர்குழலைவிரித்தியென்றுரைத்தார்மாசுறுமருச்சகன்விரித்தான்
அன்றுசீகோசம்வாக்கிகேசத்திலடக்கிவைத்தன்பர்கட்களித்தாள்
ஒன்றியேழ்கடலுமணுவெனப்பெருகுங்காதலருடையவர்க்களித்தார். (௭௬௧)

தேவரேவரினுமுனிவரேவரினுஞ்சீரியவறநெறிக்கிடராய்
மூவரேவரினுமரிதரோவுலகின்மூளைப்பதைப்புதைப்பதற்கிசைதல்
ஏவரேயெனினுமறநெறிவழாதாரெய்தியதிழந்துமற்றவர்போற்
போவரேயந்தோவுலகமோரேழும்பொடிபடமுடியினும்புவிமேல். (௭௬௨)

அன்னமென்னடையாடிருக்கையிலிருந்தவாசறுகோசத்தையவள்பான்
மன்னுமர்ச்சகனுரெடுத்தவர்க்களிப்பமறுசமயத்தவரெரியில்
றென்னவிட்டனர்கள்மற்றதைவாக்கிநெடுமுடிமிசையில்வைத்திருந்து
நன்னலத்தெதிகடலைவனுக்களித்தாளென்பதைநானிலமுழுதும். (௭௬௩)

அப்பொழுதேயறிந்ததந்நாடரசாளுமன்னவனு
மிப்பொழுதுபிறந்தவுரையதிசயமீதென்கொலெனத்
தப்பறவக்கணத்திலதுசோதிப்பான்றன்சமைந்து
வெப்பமுடனதுசெய்தசமயிகளைவிரைவினொடும். (௭௬௪)

கொண்டுவாருமெனச்சிலரைக்கோவும்விடுப்பப்பலகலையுங்
கண்டுங்காணுக்கண்ணுடையகலைஞர்வருமினெனத்தூதர்
அண்டர்வியப்பவழைத்தாசனருகேநிறுத்தநீர்திருமால்
தொண்டர்க்கிதனென்னற்செய்திட்டபரிசைச்சொன்மினென. (௭௬௫)

மன்னன்கேட்பவாங்கவர்கண்மனத்தில்வஞ்சமறவிட்டு
மின்னுமௌலிவேல்வேந்தேவேண்டாங்கேட்கப்பிறந்தவுரை
யன்னதேயாந்தேவனிவனையமில்லையாமெல்லா
மென்னதவத்தைமுற்பிறப்பிற்செய்தோம்பாலிவனெய்த. (௭௬௬)

என்றுகூறமன்னவனுமெழுந்துவிரைவினுடையவர்பாற்
சென்றுவணங்கியானுனக்காட்செய்வெனிறைவாவிரங்கென்ன
நின்றானவன்பின்மறுசமயநிலையையுடையபுலவர்களும்
இன்றிங்கியாஞ்செய்பிழைநோக்காதிறைவாவிரங்காயெனப்பணிந்தார். ()

**வேறு.**

மற்றவர்பணியவெதிகளுயகனுமன்னனைமறுசமயிகளை
யுற்றுறத்திருத்தித்தன்றிருநாமத்தோங்குமோர்மண்டபங்கட்டிப்
பற்றறவுறுத்தபத்தரும்வணங்கப்பட்டிமண்டபத்தினைநீங்கிக்
கொற்றவன்பின்சென்றீராறுகாதம்வழிவிடக்குணதிசையடைந்தான். (௭௬௮)

[தொடரும்.]

உ. தவிப்பத்திராஙியர்.